Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-


# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 21 இதழ் - 5 மே 2008

## பதினொன்றாவது வேனிற்கால வேதாகம முகாம் - மே 5-7, 2008


## 11th Summer Bible Camp - 2008



வேதாகம முகாமில், பெற்றோருடன் வந்திருந்த குழந்தைகளில் இருவர்

(kids who attended **Bible camp** with their parents)

வேதாகம முகாமில், பல பிரிவினை சபைகளிலிருந்து கலந்து கொண்ட T.V. நேயர்கள் & பத்திரிக்கை வாசகர்களுக்கான சிறப்பு வகுப்பின் போது...



During Special Class for the T.V. Viewers & Magazine Readers...

# ஆசானின் அறிவுரையில் ...


1. வேனிற்கால வேதாகம முகாம் பற்றி... ........ 1
2. ஆசிரியர் உரை ........ 2
3. எக்லீசியா வேதாகம கல்லூரி விளம்பரம் ........ 10
4. புதிய ஏற்பாட்டு ஐக்கியம் ........ 11
5. பெண்கள் பகுதி ........ 14
6. வாலிபர் பகுதி ........ 18
7. சிறுவர் பகுதி ........ 21
8. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 23
9. இரத்த சாட்சிகள் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 21 MAY - 2008 Issue - 5


## வேனிற்கால வேதாகம முகாம் பற்றி...

**மே** மாதம் **5,7-2008** ஆகிய தேதிகளில் ஏலகிரி மலையில் நடந்த பதினொன்றாவது வேனிற்கால வேதாகம முகாம் முற்றிலும் தேவனுடைய நாம மகிமைக்காக நடந்தேறியது என்பதை மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம், பாண்டிச்சேரி, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த சுமார் **400 பேருக்கும்** மேலானோர் பங்கு பெற்று, ஆவியில் உயிர் மீட்சி அடைந்து, தேவ ஆசீர்வாதத்துடனும், மன நிறைவோடும் தங்கள் இருப்பிடம் சென்றனர்.

முகாமின் வெற்றிக்காக ஊக்கமாய் ஜெபித்த, உற்சாகமாய் கொடுத்து உதவிய உங்கள் ஒவ்வொருவருக்கும், தேவனுடைய வார்த்தைகளை வல்லமையாய் எடுத்து விளம்பிய **தேவதாசர்கள்** யாவருக்கும், விசுவாசிகளை திரளாக அழைத்து வந்த கனத்திற்குரிய **ஊழிய சகோதரர்கள்** அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்த 5 பிராந்திய சபைகளைச் சேர்ந்த 10 புதிய ஆத்துமாக்கள் முடிவு பரியந்தம் நிலைத்திருக்கும்படி ஜெபிக்க மன்றாடுகிறேன்.

- **ஆசிரியர்**

ஆசிரியர் உரை

# நீங்கள் அவ்வளவு ஞானிகளா?

இத்தலைப்பைப் பார்த்து விட்டு, தயவு செய்து என்னைத் தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள். ஞானம் பற்றிப் பேசுகின்ற அளவுக்கும், எழுதுகின்ற அளவுக்கும் ஞானம் வந்து விட்டதா என்று என்னைப் பற்றி உங்கள் மனதில் எண்ணியும் விடாதீர்கள். என்னைப்பற்றி அப்படி எண்ணுவது தவறு என்று இங்கே நான் சொல்லவில்லை. மாறாக, ஞானம் பற்றிப் பேசும் தகுதியும், எழுதும் தகுதியும், எனக்கில்லையென்பதை உங்களைப் போன்றே நானும் ஊர்ஜிதமாகவே அறிவேன் என்று தான் சொல்ல வருகிறேன். அத்தோடு, ஏசாயா தீர்க்கனின் ஐந்தாம் அதிகாரத்து, "ஐயோ" க்களையும் நான் நன்கறிவேன். அந்த ஐயோக்களில் ஒன்று இவ்விதம் கூறுகிறது. "தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ" என்று (5:21). இருப்பினும், இத்தலைப்பை மையமாக வைத்து, சில காரியங்களை, வேதாகமத்தின் முழு ஆதாரத்தோடு கற்றுக்கொள்ள முடியுமென்று நான் திட்டமாக நம்பியதால், இத்தலைப்பை தாராளமாய்த் தெரிந்து கொண்டேன்.

நமது தலைப்பில் இடம் பெற்றுள்ள, "அவ்வளவு" என்ற வார்த்தையை நமது அன்றாட வழக்கில், நாம் அவ்வளவாகப் பயன்படுத்துவதில்லை. பயன்படுத்தும் சில சந்தர்ப்பங்களில் கூட, ஒன்றை நேரிடையாகக் குறிப்பிடுவதற்கு இவ்வார்த்தையை நாம் தேடுவதில்லை. மாறாக ஒன்றை மற்றொன்றுடன் ஒப்பிட்டு, அதனடிப்படையில் பேசுவதற்கே, இவ்வார்த்தை பெரும்பாலும் பயன்படும் அல்லது பயன்படுத்தப்படும். ஆகவே, "நீங்கள் அவ்வளவு ஞானிகளா?" என்று நமது தலைப்பு சொல்லும்போது, நம்முடைய ஞானம் வேறு யாருடைய ஞானத்தோடோ ஒப்பிடப்பட்டிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டியதில்லை.

நமது கரங்களில் உள்ள தமிழ் வேதாகமம் "ஞானி", "ஞானிகள்" என்று சிலரை நேரிடையாகக் குறிப்பிடுகிறது. அவர்களில் பிரதானமானவன் பழைய ஏற்பாட்டில் புகழ் பெற்ற ராஜாவாகத் திகழ்ந்த தாவீதின் குமாரன் சாலமோன் தன் தகப்பனாகிய தாவீதைப் போலவே, இவனும் புகழ் மணம் பரப்பிய ஒரு பிரபல ராஜாதான். ஆனால், தாவீது ராஜா" என்பது போல், இவன் சாலமோன் ராஜா என்று எல்லோராலும் அறியப்படாமல், "சாலமோன் ஞானி" என்றே பெரும்பாலும் அறியப்பட்டு, அழைக்கப்பட்டுள்ளான். அதற்குக் காரணம் அங்கே, "ராஜ மேன்மைக்கும்", "ஞான மேன்மைக்கும்" இடையே நடந்த

போட்டியில், ஈடுகொடுக்க முடியாத "ராஜ மேன்மை", "ஞான மேன்மை" க்கு முன்பாக தாழ்ந்து போனது. ஆம், ராஜமேன்மையை குறைவுள்ளதாக்கும் அளவு, சாலமோனின் ஞானம் பெரியது. அவனையொத்த ஞானமுள்ளவன் அவனுக்கு முன் இருந்ததுமில்லை, அவனுக்குப் பின் இருக்கப் போவது மில்லையென்று, வேதாகமமே சாட்சி பகர்கிறது. (1இராஜா 3:12). அப்படிப்பட்ட ஞானி சாலமோனுடைய ஞானத்தோடு, நம்முடைய ஞானத்தை ஒப்பிட்டு நான் எதையும் இங்கே சொல்லப் போவதில்லை. ஏனெனில், நம்முடைய ஞானம், அறிவு, புத்தி இவைகளெல்லாம், அந்த மகா ஞானத்தோடு ஒப்பிட்டுப் பேசுவதற்கு அருகதையும், லாயக்கும் அற்றவை. ஆகவே அந்தப் பேச்சே வேண்டாம்.

அடுத்து, புதிய ஏற்பாட்டில், தனது இரண்டாவது சுவிசேஷ சுற்றுப் பயணத்தின் போது, அத்தேனே பட்டணத்தில், அறிவு பெருத்தவர்களுக்கும், தனவான்களுக்கும் மாத்திரமே தாரை வார்க்கப்பட்டிருந்த, மார்ஸ் மேடையின் மீது ஏறி நின்று, இரட்சிப்பின் செய்தியைப் பிரசங்கிப்பதற்கு முன்பாக, அப்பட்டணத்தைச் சுற்றி வந்த போது, அங்கே ஞானிகள் என்ற பெயரில் "எப்பிக்கூரர்", "ஸ்தோயிக்கர்" என்ற இரண்டு பிரிவினரை அப்போஸ்தலன் பவுல் கண்டு கொண்டாரே, அவர்களுடைய ஞானத் தோடும், நம்முடைய ஞானத்தை நான் ஒப்பிடப்போவதில்லை. ஏனெனில், அவர்கள் பெற்றிருந்த அந்த ஞானம், அவர்களுக்கு எந்தவொரு ஆன்ம நன்மையையும் செய்யவில்லை. தேவனுக்கு முன்பாகப் பைத்திய மாகத் தோன்றக்கூடிய இப்படிப்பட்ட உலக ஞானம் நமக்கு அறவே தேவை யில்லை (1கொரி 1:26) ஆன்ம வாழ்வுக்கு ஆதரவுக் கரம் நீட்டாத, நித்திய வாழ்வுக்கு வழி நடத்தாத உலக ஞானம் பற்றிப் பேசுவதாலும், எழுதுவதாலும் நமக்குப் பயனேதும் இருக்க போவதில்லை. ஆகவே, அந்த ஞானத்தையும், அந்த ஞானிகளையும் நாம் ஒதுக்கித் தள்ளுவோம்.

அப்படியானால், நம்முடைய ஒப்பிடுதல் யாருடன் தான் என்று கேட் கிறீர்கள். அப்படித்தானே? கண்டிப்பாக, நம்முடைய ஒப்பிடுதல் ஞானிகளோடு தான். அவர்கள் மத்தேயு இரண்டாம் அதிகாரத்தில் இடம் பெற்றிருப்பவர்கள். இயேசுவின் பிறப்போடு சம்பந்தப்பட்டவர்கள். ஆம், நம்முடைய ஆண்டவரும், உலக மீட்பருமாகிய இயேசுவானவர், யூதேயா விலுள்ள பெத்லகேமில் குழந்தையாகப் பிறந்தபோது, அபூர்வ நட்சத்திரத்தை அடையாளமாகக் கொண்டு, சாஸ்திரிகள் கிழக்கிலிருந்து, அவரைப் பணிந்து கொள்ள வந்தார்கள் என்று அங்கே உள்ளது (மத். 2:12) கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் பற்றிப் பல விளக்கங்கள் உண்டு. கிழக்கு என்பது எந்த தேசத்தைக் குறிக்கிறதென்றும், சாஸ்திரிகள் என்பவர்கள் யார் என்றும் மாறுபட்ட கருத்துக்கள் உண்டு. அவை பற்றியெல்லாம் ஆராய்வது நமது இப்போதைய

நோக்கமல்ல. ஆயினும், நமது தமிழ் வேதாகமத்தில், அப்பகுதியில் சாஸ்திரிகள் என்று சொல்லப்பட்டிருப்பவர்களுக்கு, ஞானிகள் என்ற பொருளும் இருப்பதால், அந்த ஞானிகளை இப்பொழுது நாம் தெரிந்து கொண்டு, அவர்களின் செயல்பாடு பற்றி அலசிப் பார்த்து, அவர்களின் செயல் பாட்டோடு நமது செயல்பாட்டை ஒப்பிட்டுப் பார்த்து, நமக்குப் பயன்படும் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

## I ஞானிகள், கேட்பதைக் கேவலமாக நினைக்கவில்லை *(வ.2)*

சாஸ்திரிகளாகிய ஞானிகள் நமக்குக் கற்றுத் தரும் **முதல் பாடம்,** "தெரியாததைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு ஒருவன் வெட்கப்படக் கூடாது" என்பது.

மத். 2:1-2, வசனங்களைக் கவனியுங்கள். "ஏரோது ராஜாவின் நாட்களில், யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்த போது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, **யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?** கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்".

வேதாகமத்தால் ஞானிகள் என்று சொல்லப்பட்டுள்ள இவர்கள், பண்டைய மேதியா, பெர்சியாவைச் சேர்ந்த ஆசாரிய வம்சத்தார் என்று பெரும்பாலும் நம்பப்படுகிறது. இவர்கள் வானசாஸ்திரம், ஜோஸ்யம், மருத்துவம், இயற்கை ஆராய்ச்சி போன்றவற்றில் நிபுணத்துவம் பெற்றிருந்தவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. அக்கால கட்டத்தில், இவர்கள் அநேகரால் அறியப்பட்டு, சமுதாயத்தின் மரியாதைக்கு உரியவர்களாக இருந்துள்ளார்கள். காரியங்களின் தன்மையைத் தெரிந்து கொள்ளவும், அவைகளின் விஷயங்களைப் புரிந்து கொள்ளவும், மற்றவர்கள் தான் இவர்களிடத்திலே வர வேண்டுமேயொழிய, இவர்கள் யாரிடத்திலும் போக வேண்டிய அவசியமிருக்காது. இப்படிப்பட்ட ஒரு கூட்டத்தாருக்குத் தான் தானியேல் ஒரு சமயம், பாபிலோன் தேசத்தில் அதிகாரியாக நியமிக்கப் பட்டான் (தானி. 2:48).

ஆனால், இப்படி சிறப்புக்கள் பல பெற்ற ஞானிகளே, இயேசுவைத் தேடும் தங்கள் முயற்சியின் ஒரு கட்டத்தில், "யூதருக்கு ராஜவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? என்று பிறரிடத்தில் கேட்டுள்ளார்கள். இங்கே நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், எதையும் யாரிடத்திலும் கேட்க வேண்டிய அவசியமில்லாத நிலையிலிருந்த அந்த ஞானிகள், இயேசுவின் காரியம் என்று வரும் போது, மற்றவர்களிடத்தில் கேட்பது தங்கள் தகுதிக்குக் குறைவானதென்று நினைக்காமல், கேட்பதற்கு வெட்கப்படாமல் கேட்டுத் தெரிந்து கொண்டனர் என்பதுதான்.

அன்பானவர்களே, இந்த ஞானிகளின் நிலையோடு நம்முடைய நிலையை சற்று ஒப்பிட்டுப் பார்ப்போம். இன்றைய கிறிஸ்தவ உலகமும், நாமும் அந்த ஞானிகளைப் போல் செயல்பட்டுக் கொண்டுள்ளோமா? இயேசுவின் காரியமாக நமக்குத் தெரியாதவைகள், விளங்காதவைகள் என்று வரும் போது தெரிந்தவர்களிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உடையவர்களாக இருக்கிறோமா? சொல்லுங்கள். அப்படியில்லை யென்றால் நாம் அந்த ஞானிகளைக் காட்டிலும் நம்மை ஞானிகளாக நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்று தானே பொருள்.

வேத வசனங்களால் ஞானிகள் என்று சாட்சியிடப்பட்டு, அன்றைய உலகத்தால், தங்கள் ஞானத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றவர்களே, தங்களுக்குத் தெரியாதவைகளைத் தெரிந்து கொள்ள, பிறர் உதவியை நாடின போது, நாம் ஏன் தேவ இரகசியங்களை அறிந்து கொள்ள, தேவ வசனங்களின் சரியான விளக்கங்களைத் தெரிந்து கொள்ள கௌரவம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்? கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்ளுகின்ற அநேகர், அதே கிறிஸ்துவின், காரியமாக, போலி கௌரவம் பார்த்து கொண்டுள்ளார்கள் என்பது எவ்வளவு பரிதாபமானது தெரியுமா? என்னுடைய தகுதிக்கும், என்னுடைய படிப்பிற்கும், என்னுடைய பராம்பரியத்திற்கும், நான் எப்படி அவர்களுடன் சேர்ந்து வேதாகமத்தைப் படிப்பது? நான் எப்படி அவர்கள் சொல்லுவதை ஏற்றுக் கொள்வது! நான் எப்படி அவர்களுடன் சேர்ந்து ஆராதிப்பது? என்றெல்லாம் அநேகர் தங்களுக்குள்ளே கேள்விகளை எழுப்பி தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டுள்ளார்கள். இதுதான் இன்றைய கிறிஸ்தவர்களின் உண்மை நிலை ஒருவேளை ஞானிகள் அப்படி எண்ணியிருந்தால், அவர் களால் இயேசுவைக் கண்டிருக்க முடியுமா? ஞானிகளே, வெட்கப்படாத போது, நமக்கு எதற்கு வெட்கம்? ஞானிகளே கேட்பதைக் கேவலமாக நினைக்காத போது, நாம் ஏன் அப்படி நினைக்க வேண்டும்? அந்த ஞானிகளிலும் நாம் மேலானவர்களா?.

**கேட்பது நன்மையானது** என்பதற்கு **ஒரு சிறந்த உதாரணம்** அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில் உள்ளது. அங்கே, எத்தியோப்பிய மந்திரி தனது பக்திப் பயணத்தை முடித்து ஊர் திரும்பும்போது, வழியிலே தேவ ஊழியக்காரன் பிலிப்புவைச் சந்திக்க நேர்ந்தது (அப். 8:28). தயவு செய்து அந்த சந்திப்பைக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். ஒருவன் நிதி மந்திரி மற்றவன் சாதாரண மனிதன். நிதி மந்திரி மெத்தப்படித்தவன், பிலிப்பு அந்தளவு படிக்காதவன், நிதி மந்திரி எடுப்பான தோற்றம் கொண்டவன். பிலிப்பு சராசரி மனிதனுக்குரிய தோற்றமுடையவன். நிதி மந்திரி இரதப் பயணம். பிலிப்பு கால்நடைக்காரன், கவனித்துப்பார்த்தால் எல்லா

வகையிலுமே இருவருக்குமிடையே பெருத்த வித்தியாசம். நிதி மந்திரி இந்தப் பிலிப்புவை ஏறெடுத்துக் கூடப் பார்த்திருக்கத் தேவையில்லை. ஆனால், நடந்த சந்திப்பின் போது, அப்பேர்ப்பட்ட எத்தியோப்பியா மந்திரியே "நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா?" என்ற பிலிப்புவின் கேள்விக்கு, "ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டு, பிலிப்புவைத் தன்னிடமாகச் சேர்த்துக் கொண்டு, வேத வாக்கியங்களின் சரியான அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு, இறுதியிலே பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான் (அப். 8-30-39) என்று.

ஆகவே தேவனுக்கடுத்த காரியங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு, ஒரு போதும், வெட்கப்படாமல், கௌரவம் பார்க்காமல் கேட்போம். கேட்பதின் மூலம், இயேசுவையும், அவர்தம் இரட்சிப்பின் திட்டத்தையும், அவர் கட்டின ஒன்றான மெய் சபையையும் தெரிந்து கொள்வோம்.

### II. ஞானிகள் தேவனுடைய சத்தத்திற்கு மாத்திரம் கீழ்ப்படிந்தார்கள் *(வ.12)*

சாஸ்திரிகளாகிய ஞானிகள் நமக்குக் கற்றுத்தரும் **இரண்டாவது பாடம்,** "ஒருவன் தேவனுடைய சத்தத்திற்கு மாத்திரம் கீழ்ப்படிய வேண்டுமென்பது".

இயேசுவாகிய பிள்ளையினிமித்தம் கலக்கமுற்ற ஏரோது, தனது சமஸ்தானத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்று பயந்து, இயேசுவாகிய குழந்தையைக் கொன்று போட வஞ்ச எண்ணங்கொண்டு, ஞானிகளிடத்தில் தந்திரமாகப் பேசி, "நீங்கள் போய்ப் பிள்ளையைக் குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள். நீங்கள் அதைக் கண்ட பின்பு, நானும் வந்து அதைப் பணிந்து கொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களை பெத்லகேமுக்கு அனுப்பினான்" (வ.8). ஆனால், 12ம் வசனம், பின்பு அவர்கள் ஏரோதினிடத்திற்கு திரும்பிப் போக வேண்டாமென்று சொப்பனத்தில் **தேவனால் எச்சரிக்கப்பட்டு,** வேறு வழியாய் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்" என்று சொல்கிறது.

இந்த இரண்டு வசனங்களிலிருந்து, நாம் தெரிந்து கொள்வது என்ன? ஞானிகள் யாருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தார்கள்? அங்கே, ஞானிகளுக்கு முன்பாக, இரண்டு பேருடைய வார்த்தைகள் வைக்கப்பட்டுள்ளது. ஒன்று, "எனக்கும் வந்து அறிவியுங்கள்" என்ற ஏரோது ராஜாவின் வார்த்தை. மற்றொன்று, "ஏரோதினிடத்தில் திரும்பிப் போக வேண்டாம்" என்ற ராஜாதி ராஜாவின் வார்த்தை. ஞானிகள் யாருடைய வார்த்தைகளைத் தெரிந்து கொண்டார்கள். சொல்லுங்கள் ராஜாதி ராஜாவாகிய தேவனுடைய வார்த்தைகளைத் தான்.

அருமையானவர்களே நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில், இயேசுவுக்கும் அவர்தம் இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த சபைக்கும் (அப். 20:28) அடுத்த காரியத்தில், நாம் யாருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து கொண்டுள்ளோம்? மனிதனுடைய வார்த்தைகளுக்கா? அல்லது தேவனுடைய வார்த்தைகளுக்கா? மனித கொள்கை, கோட்பாடுகளுக்கா அல்லது தேவ வெளிப்பாட்டுக்கா? மனித உபதேசங்களுக்கா அல்லது தேவ வசனங் களுக்கா? மனிதனைப் பிரியப்படுத்துகிறவர்களாக உள்ளோமா அல்லது தேவனைப் பின்பற்றுகிறவர்களாக உள்ளோமா? சொல்லுங்கள், "நாம் இன்னும் மனிதரைப் பிரியப்படுத்துகிறவர்களாயிருந்தால், கிறிஸ்துவின் ஊழியக் காரனல்லவே" (கலா 1:10) என்ற வசனம் உங்களுக்குத் தெரியுமா?

அந்த ஞானிகள், அந்நாட்களில் சர்வ அதிகாரமும் கொண்ட ஏரோது ராஜாவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் தேவனுடைய வார்த்தை களுக்குக் கீழ்ப்பட்டிருக்கும் போது, நம்முடைய ஆன்மாவின் மீது, ஒரு அதிகாரமும் இல்லாத மதத் தலைவர்களின் வார்த்தைகளுக்கு நாம் பவ்விய மாகக் கட்டுப்பட்டு, தேவனுடைய வார்த்தைகளை ஏன் மீறி நடக்க வேண்டும்? இந்த மதத் தலைவர்களும், மார்க்க முன்னோடிகளும், குறிப்பாக இன்று வரம் பெற்றவர்கள் என்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொள் பவர்களும் "குருடனுக்குக் குருடன் வழிகாட்டுதல்" போன்றல்லவா ஜனங்களை நடத்திக் கொண்டுள்ளார்கள்! இயேசுவின் நாட்களில் இருந்த நிலை இன்றும் நீடித்துக் கொண்டு தானே உள்ளது. (மத். 15:14) இயேசுவுக்குச் செவி கொடுங்கள் என்று மறுரூபமலையிலே அறிவிக்கப்பட்டு (மத். 17:5). அந்த இயேசுவைக் கொண்டு, புதிய ஏற்பாட்டை, தேவன் கொடுத்திருக்கும் போது, அந்தப் புதிய ஏற்பாட்டின் வார்த்தைகளுக்குப் புறம்பாக, இந்த மதத் தலைவர்கள், ஆளாளுக்கு கொள்கைப் புத்தகங்களை உருவாக்கிக் கொண்டு அதனடிப்படையில் ஒரு கூட்டத்தையும் சேர்த்துக்கொண்டு, வழி நடத்திக் கொண்டுள்ளார்களே, பின்னே இவர்களெல்லாரும் குருடரான வழிகாட்டி களில்லையா? புதிய ஏற்பாட்டின், **இரட்சிப்பின் திட்டம்** அவர்களுடைய கொள்கைப் புத்தகங்களில் எங்கே இருக்கிறது? காட்டுங்கள் பார்க்கலாம்!

அருமையானவர்களே, இந்த வேஷதாரிகளின் வார்த்தைகளுக்கு நீங்கள் ஏன் இன்னும் கட்டுப்பட்டு நடக்கிறீர்கள்? அந்த ஞானிகள் என்ன செய்தார்கள்? ஏரோது ராஜாவா? தேவாதி தேவனா? என்ற நிலை வந்த போது, யார் பக்கம் நின்றார்கள்? சொல்லுங்கள். இப்பொழுது தேவ வெளிப் பாடா? அல்லது மனித ஏற்பாடா? என்று வரும்போது, நீங்கள் யார் பக்கம் நிற்கப் போகிறீர்கள்? நீங்கள் மனிதர் பக்கம் நிற்கிறவர்களாயிருந்தால் நீங்கள் அந்த ஞானிகளிலும் ஞானிகளா? ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக,

நிறுத்தப்பட்டு, மிரட்டப்பட்ட நிலையிலும், பேதுருவும் மற்ற அப்போஸ் தலரும், "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது". என்று சொல்லியுள்ளார்களென்பது தெரியுந்தானே! (அப். 5:29).

## III. ஞானிகள் இயேசுவைப் பணிந்து கொடுத்து, தங்கள் பக்தியை வெளிப்படுத்தினார்கள். *(வ.11)*

சாஸ்திரிகளாகிய ஞானிகள் நமக்குக் கற்றுத்தரும், **இன்னுமொரு பாடம்** "ஒருவன் தன்னையும், தன்னிடத்திலிருப்பதையும் தேவனுக்குக் கொடுக்க வேண்டுமென்பது".

"அவர்கள் (ஞானிகள்) அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளை யையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து, அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும், தூப வர்க்கத்தையும், வெள்ளைப் போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்" (மத். 2:11) என்று வசனம் சொல்கிறது.

இந்த வசனம், அவர்கள் இரண்டு காரியங்கள் செய்ததாக நமக்குக் கூறுகிறது. ஒன்று, "அவர்கள் இயேசுவைப் பணிந்து கொண்டது", (பணிந்து என்பதற்கு ஆங்கில வேதாகமத்தில் ஆராதித்தார்கள் என்றுள்ளது) மற்றொன்று "இயேசுவுக்குக் கொடுத்து இந்த ஞானிகள் புறஜாதியார், இயேசுவின் தெய்வீகத்தை இவர்கள் முறையாக அறிந்திருக்க நியாய மில்லை. ஆனால், அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட கொஞ்ச காரியமே, அவர்கள் கண்டு கொண்ட சிறிதளவு காரியமே அவர்கள் அவரைப் பணிந்து, ஆராதிக்கும்படியாகச் செய்துள்ளது". ஆனால், இன்றைக்கு இயேசு பற்றியும், அவருடைய தெய்வீகம் பற்றியும், அதன் நோக்கம் பற்றியும், அவருடைய உபதேசம் பற்றியும், அவர் உயிர்த்தெழுதல் பற்றியும், அவருடைய சபை பற்றியும், அதற்குள் வரவேண்டிய அவசியம் பற்றியும், அவருடைய இரண்டாம் வருகை பற்றியும், அதற்குப் பிறகான நியாயத் தீர்ப்பு பற்றியும் அதிகதிகமாய் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் நாம். அவரைப் பணிந்து கொள்கின்ற விஷயத்தில், அவரை ஆராதிக்கின்ற காரியத்தில் எந்தளவு உண்மையாய் உள்ளோம். தயவு செய்து சிந்தியுங்கள்.

"ஒருவேளை நான் தவறாமல் ஆராதிக்கிறேன்" என்பது உங்களது பதிலாக இருக்குமானால், வேத வசனம் சொல்லுகிறபடி, "ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கிறீர்களா? (யோவா 4:29) என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள்". "ஆவியோடும் என்பது ஆராதிப்பவர்களின் நேர்மையான மனநிலையையும்", "உண்மையோடும் என்பது, ஆராதிக்க வேண்டிய முறை பற்றியும் வசனத்தின் வழிகாட்டுதலையும் குறிப்பதாகும்" (கொலே. 3:17) ஆகவே, தேவனுக்காக நீங்கள் ஏறெடுக்கும் ஆராதனையில், இருக்க வேண்டிய ஐந்து பங்குகளும், அதாவது பாடல் (எபே. 5:19) ஜெபம்

(அப். 2:4,2), வேதம் வாசித்தல் அல்லது போதித்தல் (1பேதுரு 4:11) கர்த்தரின் பந்தி (மத். 26:28) கொடுத்தல் (1கொரி. 16:1,2) இருக்கிறதா என்று நிச்சயித்துக் கொள்ளுங்கள். உங்களின் ஒவ்வொரு ஞாயிறு ஆராதனை களிலும், இவைகள் இல்லையானால் உங்கள் ஆராதனை உண்மையான ஆராதனையாக இருக்க முடியாது.

அடுத்து ஞானிகள் இயேசுவுக்கு சிறந்ததையே காணிக்கையாகக் கொடுத்துள்ளார்கள். "பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் என்று உச்சிதமான பொருள்களைக் கொடுத்துள்ளார்கள்". தேவனுடைய உண்மைப் பிள்ளையாயிருந்து, அவரை ஆராதிக்கும் நாம் ஒவ்வொருவரும், நம்முடைய இருதயத்தையும், ஆத்துமாவையும் அவருக்குக் கொடுக்கிறது போல, அவருடைய காரியங்களை மதித்து அவர்தம், கட்டளைகளை நிறை வேற்றுவதற்கு, உற்சாகமாய், சிறந்ததைக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம். இன்னும் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகளுக்கு நன்றி சொல்லும்படியாகவும் நாம் கொடுக்க வேண்டும். சங்கீதரக்காரன் சொல்லு வதைப் பாருங்கள், "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக் காகவும், அவருக்கு என்னதைச் செலுத்துவேன்?" (சங். 116;12) பவுலடியார், கொரியந்திருக்குச் சொல்லும் போது, "இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய ஜாக்கிரதையைக் கொண்டு, உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும் பொருட்டே சொல்லுகிறேன்". என்கிறார் (1கொரி 8:8) பரலோகத்தின் தேவன், **தம்முடைய ஒரே பேரான குமாரனையே நமக்காகக் கொடுத்தார்.** அதை ஒரு கணம் சிந்தித்தால், நமது கொடுத்தல் எவ்வளவு சிறப்பானதாக இருக்க வேண்டுமென்பது, நன்றாகவே விளங்கும் ஆகவே சிறந்ததையே எப்போதும் தேவனுக்கு கொடுக்க கூடியவர்களாக இருப்போம். சிறந்ததை உற்சாகமாய்க் கொடுப்பதின் மூலம், நமது கணக்குக்குத்தான் பலன் பெருகுகிறது என்பதை உணர்ந்து கொடுப் போம் (பிலி. 4:17).

எனக்கன்பானவர்களே, ஞானிகளோடு, நம்முடைய வாழ்வை ஒப்பிட்டுப் பார்க்கும்படியான வாய்ப்பை நாம் பெற்றோம். இந்த ஞானிகளைப் போல நமது செயல்பாடும் இருக்குமானால், நாமும் அவர்களைப் போல ஞானிகளாக இருக்க முடியும். இல்லையேல், இப்பூமியில் மிஞ்சின ஞானிகளாகத் திகழ்ந்து, நித்தியத்தை இழந்து போகும் நிலை ஏற்படும். நம் யாருக்கும் அப்படிப்பட்ட நிலை ஏற்பட வேண்டாம். நாம் ஒவ்வொருவரும் சாஸ்திரிகளைப் போன்றே ஞானமுள்ளவர்களாய் இருப்போம். அப்படிப்பட்ட ஞானத்தைப் பரலோகத்தின் தேவன் நமக்குத் தந்தருளுவாராக! ஆமென்.

**S. ராஜநாயகம்**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

P.O. Box-27, KANGAYAM - 638 701. India.

## STUDENTS ADMISSION NOTIFICATION

**பு**திய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட **வாலிபர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

**காலம்** : **3 வருடம்** (ட்ரைமஸ்டர் முறை)

**Duration** : **3 Years** (Trimester System)

**கல்வித்தகுதி** : **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு**

**Qualification** : **+2 Pass (or) Any Degree**

**பட்டம்** : **வேதயியலில் இளங்கலை பட்டம்**

**Degree** : **B.B.S.** (Bachelor of Biblical Studies)

**விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

## இயக்குநர்

எக்லீசியா வேதாகமக் கல்லூரி

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா

✆ 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

# புதிய ஏற்பாட்டு ஐக்கியம்

மார்க்க ரீதியான உலகம் பிளவுபட்டு காணுகிறது. கத்தோலிக்கம், புராட்டஸ்டன்ட், பிற பிரிவுக் கூட்டங்கள், பிரிவுகள், மற்றும் வித்தியாசப்பட்ட குழுக்கள் ஆகியவை, பிளவுபட்டுக் காணுகின்றன. இவர்களெல்லாரும் ஒரே கர்த்தரைத்தான் ஆராதிப்பதாக கூறுவர். அதே வேளையில், தங்களிடம் ஏதோ ஒரு குறை இருப்பதை உணருகின்றனர். அதன் விளைவாகத்தான் ஐக்கியத்தை கொண்டு வர அவர்களில் சிலர் பிரயாசப்பட்டனர். மகா நாடுகள், கூட்டங்கள், கருத்தரங்கம் போன்றவற்றை அந்தந்த குழுத் தலைவர்கள் ஒன்றாகக் கூடி பொதுவானதொரு ஐக்கியத்திற்கு வழிகாண முற்படு கின்றனர். இவர்களில் இந்த முயற்சிகளை நாம் பாராட்டினாலும், இந்த கூட்டத்தினர் தங்கள் தங்கள் கொள்கை புத்தகங்கள், விநோதமான நம்பிக்கைகள், தங்களை அழைத்துக் கொள்ளும் பெயர்கள், உபதேசக் கோட்பாடுகள், நடைமுறைகள் ஆகியவற்றை இவர்கள் மாற்றி, வேதத்தின் போதனைகளுக்கு மாத்திரம் திரும்பாத வரை இவர்களின் அடிமனதில் காணும் ஐக்கியத்தை இவர்களால் எதிர்பார்க்க இயலாது. இதை ஒரு முறை அவர்கள் செயல்படும் போதுதான் உண்மை ஐக்கியத்தை இவர்கள் காண இயலும்.

பிரிவினைகளையும், குழப்பங்களையும் தேவன் வெறுக்கிறார். வசனம் தெளிவாக இதைக் காட்டுகிறது. உதாரணமாக, கொரிந்து பட்டணத்தில் இருந்த கர்த்தருடைய சபையிலே பிரிவினைகள் உண்டானபோது பவுல் உடனடியாக அவர்களைக் கடிந்து கொண்டார். வாசகத்தைக் கவனியுங்கள். சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தி னாலே உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன். ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்கு வாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. உங்களில் சிலர், நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்போஸ்தலனைச் சேர்ந்தவ னென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப் பட்டான்? பவுலின் நமாத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடி நான் கிறிஸ்துபுவுக்கும் காயுவுக்குமேயன்றி உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. இதற்காகத் தேவனை ஸ்தோத்திரிக் கிறேன். ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானம் கொடுத்தே னோ இல்லையோ அறியேன். ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை. சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே அனுப்பினார்.

கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார். (1கொரி. 1:10-17).

தொடர்ந்து வரும் வசனங்களில் பவுல், ஐக்கியத்தை வேண்டுவதை நீங்கள் காணக்கூடும். பிரிவினைக் குறித்து அணுகுமுறையில் கேள்விகளை கேட்டு அதன் வாயிலாக அவர்களது பெலவீனத்தை (அல்லது தவறை) அவர் உணர்த்துவதைக் காணலாம். அவர் கேட்ட முதல் கேள்வி, கிறிஸ்து பிரிந்திருக் கிறாரா? "அவர்களுக்கு இரண்டாவது கேள்வி, பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டார்? இல்லை. கிறிஸ்துதான் தங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார்" என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். இறுதியாக பவுல், "...பவுலின் நாமாத்தினாலேயோ ஞானஸ்நானம் பண்ணப்பட்டீர்கள்?" என்று கேட்டார். இல்லை, அவர்கள் எந்த மனுஷ னுடைய நாமத்திலும் ஞானஸ்நானம் பண்ணப்படவில்லை. கிறிஸ்துவின் நாமத்தினாலேயே ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தனர். எனவே அவர்கள் எல்லாரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கே வருகிறோம். எவ்வளவு எளிமையானது.

தன் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றதாக ஒருவரும் கூறாத படிக்கு, பவுல் ஒரு சிலரை மாத்திரம் ஞானஸ்நானப்படுத்தியதைக் குறித்து சந்தோஷப்படுகிற இதே வேளையில், கொரிந்துவில் இப்படிப்பட்ட (பிரிவினை) பிரச்சனையிருப்பதை சுட்டிக்காட்டுகிறார். இதை மனதில் கொண்டுதான், சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே தான் வந்ததாகவும், ஞானஸ்நானம் பண்ணுவதற்கல்ல என்பதையும் குறிப்பிடுகிறார். இன்னொரு வார்த்தையில், சொன்னால் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிற நோக்கத்திற்காகத் தான் வந்ததாக் குறிப்பிடுகிறார். ஜனங்கள் அவரது பிரசங்கத்தின் விளைவால் ஞானஸ்நானம் கொடுக்காமல், மற்றவர்களையே ஞானஸ்நானம் கொடுக்கச் செய்தார். ஞானஸ்நானத்திற்கு எதிராக பவுல் பிரசங்கிக்கவில்லை. அப்படியானால், அவர் யாருக்குமே ஞானஸ்நானம் கொடுத்திருக்கமாட்டார். மாறாக, சூழ்நிலைக்கேற்ப அவர் ஒரு சிலருக்கு மாத்திரம் ஞானஸ்நானம் கொடுத்தமைக்கு மகிழ்வடைந்தார்.

ரோமர் 16:17,18-ல் பவுல், "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாகப் பிரிவினைகளையும், இடறல் களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர் களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பி னாலும், இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்". அப்போஸ்தலர் சொல்லுவதென்ன வெனில், பிரிவினைகளை உண்டாக்குகிறவர்களை விட்டு விலகி யிருக்க வேண்டு என்பதே, ஏன்? ஏனெனில் அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல், ஜனங்களின் இருதயங்களை தங்களின் நயவசனிப்பினால் வஞ்சிக்கின்றனர். மறுபுறத்தில் அவர்களை அவர் பாராட்டவோ, புகழவோ, அல்லது அவர்களது செய்கைகளை பொறுத்துக் கொள்ளவோ செய்யவில்லை. பிற வசனங்களும் இதை உறுதிப்படுத்தியே பேசுகின்றன. எனவே தங்களைத் தேவனைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லு

பவர்களெல்லாம் தேவனைச் சார்ந்தவர்கள் அல்லர், வேதத்தை போதிக்கிறோம் என்று கூறுவோரெல்லாம் வேதத்தை முறையாகப் போதிப்போரல்லர், தங்களுக்கே எச்சரிக்கையை எடுத்துக்கொள்ளாமல், மற்றவர்களை வஞ்சிக்க தீர்மானித்து செயல்படுகின்றனர்.

இயேசுவும் ஒற்றுமைக்காக, முழுமைக்காக, நிறைவுக்காக ஜெபித்தார். அவர் சொல்லுவதைக் கேளுங்கள். "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் வஞ்சிக்கிறதற்காக, நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்". (யோவான் 17:20,21). இங்கு கிறிஸ்து அப்போஸ்தலருக்காக ஜெபிப்பதோடல்லாமல், அவர்களுடைய பிரசங்கத்தினால் அவர்களை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் ஜெபிக்கிறார். பிறகு அவர்களெல்லாரையும் குறித்து குறிப்பிடுகையில், "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் என்று கேட்கிறார். எந்த அளவுக்கு? அவரும் அவருடைய பிதாவும் ஒன்றாயிருப்பது போல என்று குறிப்பிடுகிறார்". இதுவே உண்மையான ஐக்கியம்.

பவுலின் எழுத்துக்களுக்குத் திரும்புவோமானால், ஐக்கியத்திற்கு ஓர் அடிப்படையான கருத்துக்களை அவர் கூறுகிறார். "ஆதலால் கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" (எபே. 4:1-6) இவைகள் ஒவ்வொன்றிலும் எத்தனை? ஒன்று மாத்திரமே, எத்தனை ஒன்று? "ஒரே" ஒன்று. உலகமெங்கிலும் காணும் பல (பிராந்திய) சபைகளையும் இணைத்து ஒரே சபை (சரீரம்) என்று கூறப்படு கிறது என்றால், அதுபோலவே தேவனையும், கிறிஸ்துவையும் குறித்த ஒற்றுமையை குறிப்பிடுகிறது எனலாம் எனது நண்பர்களே, தேவன் நமக்கு ஒரே புத்தகமாகிய வேதத்தைக் கொடுத்திருக்கிறார். நாம் அதை வாசித்து, விசுவாசித்து, அதன் போதனைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்போமாகில், பிறகு நாம் எல்லாரும் ஒரே உபதேசங்களுக்கு கீழ்ப்படிவோம். ஒரே சபையில் சேர்க்கப்பட்டிருப்போம். ஒரே பெயரைத் தரித்துக்கொள்ளுவோம். ஒரே மாதிரி ஆராதனையைச் செய்வோம். ஒரே காரியத்தை பிரசங்கிப்போம். வேதாகமம் நம்மை பிரித்து வைக்காமல், நம்மை ஒன்று சேர்க்கும். நாம் பிரிந்திருக்க வேண்டுமென்று கிறிஸ்து ஜெபிக்காமல், ஒன்றாயிருக்கும் படிக்கே ஜெபித்தார். தேவனுடைய சித்தத்தை நாம் செயல்படுத்தும் போது மட்டுமே ஒன்றுபட்டிருப்போம்.

**J.C. Choate** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# ஆண்கள் தலைமைக்கும், பெண்கள் அவர்கள் துணைக்கும்

ஒரு ஆண்பிள்ளைக்கு, அவனுடைய இளம்பருவத்திற்கான காரியங்கள் மற்றும் பண விஷயங்களில் அவன் கவனமாக இருக்க வேண்டியதன் அவசியம் பற்றி போதிப்பதைக் காட்டிலும், அவன் வளரும் போதே, தேவ மனிதனுக்கேற்ற பண்புகளைப் பெற்றுக்கொள்ளும்படி போதிப்பது முக்கியமானது.

அதாவது, தன்னுடைய குடும்பத்திற்கு, அவன் அன்பான ஒரு தலைவனாக இருப்பது பற்றி, தன்னுடைய மனைவிக்கும், பிள்ளைகளுக்கு மிடையே, பொறுப்புள்ளவனாக நிற்க வேண்டியது பற்றி, குடும்பத்திற்கும், உலகத்திற்கும் இடையே நிற்க வேண்டியது பற்றி, குடும்பத்திற்கு ஆவிக்குரிய தலைவனாக இருப்பது பற்றி, குடும்பம் எடுக்கும் முடிவுகளுக்கு தேவனுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் பற்றியெல்லாம் போதிக்க வேண்டும்.

ஆண்களோடு போட்டியிடும் வண்ணம், இன்றைய பெண் பிள்ளை களின் பொதுவான வளர்ப்பும், பயிற்சியும் அமைந்திருக்கிறது. இப்படிப் பட்ட அமைப்பினால், பெண்கள் தங்கள் வாழ்க்கை துணைவருடன் பிரச்சி னையை சந்திக்க நேரிடுகிறது. திருமண உறவுக்குள் தன்னை உட்படுத்தும் வேளைக்காக ஆயத்தப்படுத்தவும், தன்னை தெரிந்து கொண்ட (அல்லது தான் தெரிந்து கொண்ட) கணவரின் வாழ்க்கை முழுமையாகச் செய்யவும், தன் குடும்பத்தின் மேல் அன்புள்ளவளாக, கரிசனையுள்ளவளாக இருக்கவும், தேவன் தன் கணவனை தன்னுடைய நலனுக்காகவே உண்டாக்கியிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு பெண்ணிடம் தேவன் எதிர்பார்க்கிறார். நிச்சயமாகவே, தன் கணவனுக்கு சிறந்த துணையாக அமையவும், தன் பிள்ளைகளை சிறப்பாக வளர்க்கவும் அவள் தன் மனதை தரமான கல்வி அறிவுடன் வளர்க்க வேண்டும்.

ஆனால், துரதிஷ்டவசமாக, எளிமையான இல்லத்தரசியாகவும், தாயாகவும், மனைவியாகவும் இருப்பதில் ஆர்வமின்மையால், பெண்கள் இக்காரியத்தைக் குறித்து பெரிதாக கவலைப்படுகிறார்கள். இது ஒரு சோகமான, ஆர்வம் காட்ட முடியாத வேலை என்ற கருத்து நிலவுவதினால் அநேகத் தாய்மார்கள் தங்கள் பிள்ளை வளர்ப்பிலிருந்து தப்பித்துக் கொண்டு அலுவலகங்களில் வேலை பார்க்கும் உற்சாகத்தை அடைய கொஞ்சமும் தாமதிப்பதில்லை. இப்படிப்பட்ட மனோபாவங்கள் அதிகமாய் கற்றுக் கொடுக்கப்பட்டவை - நமது கலாச்சாரம், ஒன்றுக்கும் உதாவாதவர்களும், அடக்கப்பட்டவர்களும் தான் வீட்டிலிருப்பார்கள் என்றும், தாலந்துள்ள வர்கள், உலகத்தில் போட்டிப்போட்டுக்கொண்டு தங்களுக்கென்று நல்லதொரு எதிர்காலத்தை உண்டாக்கி, அதிகமாய் சம்பாதிப்பார்கள் என்றும் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொடுக்கிறது.

கடந்த தலைமுறையில் தாய்மைத்துவம் என்பது பெருமையாகப் பேசப்பட்ட ஒன்றாக இருந்தது. பெண்கள் தங்கள் பிள்ளைகளில் மகிமையடைந்தார்கள். தங்கள் கணவனிமித்தம் புகழ்ச்சி அடைந்தார்கள். தங்கள் திறமைகளை குடும்பத்திற்காக பயன்படுத்துவதை கௌரவமாக எண்ணினார்கள். அவர்களெல்லாம், நசுக்கப்பட்டவர்களோ அல்லது வெறுப் படைந்தவர்களோ, கல்லாதவர்களோ, வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களோ அல்ல. தங்களைப்பற்றியும், தாங்கள் என்ன செய்கிறார் களோ அதிலேயும் மகிழ்ச்சியாயிருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் தேவனுடைய சித்தத்தைப் பற்றி கற்பிக்கப்பட்டிருந்தார்கள்.

## I. அவர்கள் என்ன கேட்கிறார்கள் அல்லது எதைப் பார்க்கிறார்கள்?

நாம் எப்படி சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடிம்? நம் குழந்தைகள் எப்படி சிறப்பாக கற்றுக்கொள்ள முடியும்?

**வாயின் வார்த்தைகளினால்:**- அன்றாடம், பெற்றோராகிய நாம் நம் பிள்ளைகள் வெற்றியுள்ள வாலிபர்களாக வருவதற்கு நம் வாயின் வார்த்தைகள் அவர்கள் கற்றுக்கொள்ளும்படியாக இருக்க வேண்டும்.

**வாழ்க்கையினால்** :- நாம் வார்த்தைகளை தொடர்ந்து பேசாமல் இப்பொன்றும் பிறகொன்றுமாக பேசுகிறோம். ஆனால், நாம் ஒரு நாளின் இருபத்து நான்கு மணி நேரமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தானாகவே, நம் பிள்ளைகள் நம்மிடமிருந்து எதைக் கேட்கிறார்களோ அதை விட நம்மிடமிருந்து எதைப் பார்க்கிறார்களோ அதையே பலமடங்கு அதிகமாக கற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக, இதுதான் உண்மையான மனோநிலை. ஒரு பெண் ஓயாமல் தன் கணவனுடன் வாக்குவாதம் செய்து கொண்டு, அவனுடைய தலைமைத் துவத்தை சவால் விட்டுக் கொண்டு இருக்கும் போது, தன்னுடைய பெண் பிள்ளைகள் அவர்கள் கணவன்மார்களுக்கு கீழ்ப்படிந்து அவர்களை மதிக்கச் சொல்லி கற்றுக்கொடுக்கும் போது அவள் முழு வெற்றியையும் அடைந்து விட முடியாது. அதைப்போலவே, தன் மனைவியை அற்பமாய் எண்ணுகிற ஒரு கணவன் அல்லது திடசித்தமில்லாமல் பெண்களால் ஆளப்படும் ஒரு கணவன் தன் ஆண் மக்கள் அவர்களுடைய மனைவிகளில், கிறிஸ்து சபையில் அன்பு கூர்வது போல அன்பு கூறவேண்டுமென்று கற்றுத்தர முடியாது. அத்தோடு தன் மகன்களை ஒரு பொறுப்புள்ள, தலைமையேற்று நடத்தக் கூடிய பண்புள்ளவர்களாக உருவாக்க முடியாது. சந்தேகத்திற்கிடமின்றி, நம்முடைய பிள்ளைகள் அவர்களுடைய வாழ்க்கையை பற்றியதான அணுகு முறைகளை நம்மைப் பார்த்துதான் கற்றுக் கொள்கிறார்கள். ஆகையால், நாம் கற்றுக்கொடுக்ககூடிய விஷயங்களில் மிகவும் ஜாக்கிரதை யுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

## II. அதிகாரம், உண்மையாகவே யாரிடத்திலிருந்து வருகிறது?

ஆண், பெண், பெற்றோர் என்ற நம்முடைய பின்னிப்பிணைந்த இந்த உறவில், அதிகாரங்களை நாம் யாரிடமிருந்து பெற்றுக்கொள்கிறோம்? தலைமையேற்று நடத்துவது, கீழ்ப்படிந்து போவது என்பதெல்லாம் சாதாரணமாக வழக்கத்தில் உள்ள ஒன்று, மற்றபடி இதில் ஏதும் விசேஷம் இல்லையென்று மக்கள் அநேக சமயங்களில் நினைத்து விடுகிறார்கள். ஆண்கள் தங்களுக்கேயுள்ள பலத்தால் பெண்களை ஆளுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பொதுவாக நிலவி வருகிறது. பெண்களும் தங்கள் கணவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, மிகவும் அற்பமாய் சுய நலமாயும் ஆண்களால் நடத்தப்படுகிறார்கள் என்ற எண்ணம் இருந்து வந்தது. இன்றைய நாட்களில் அநேக குழந்தைகள் எந்தவிதமான அதிகாரங்களையும் மதிப்பதில்லை. தங்களை கண்டிக்கிறவர்களிடம் ஒருவிதமாக ஆத்திரத்துடனும், கீழ்ப்படிய மனமில்லாமலும் கூடிய முகத்தை வைத்துக்கொண்டும் உள்ளனர். உதாரணமாக பெற்றோர், ஆசிரியர், அதிகாரிகள் அரசாங்கம் போன்றோரிடம் இவ்வாறு நடந்து வருகிறார்கள்.

அதிகாரங்கள் தேவனிடத்திலிருந்து வருகிறது. அவர்தான் எல்லா மனித இனத்திற்கும், மனித இனம் சம்பந்தப்பட்டவைகளுக்கும் சர்வ அதிகாரி. ஆண் குடும்பத்திற்கு தலையானவன் என்று அவர் சொல்லும் போது அந்த தகுதியான வேலைக்கு அவனை நியமித்தார் என்பதை சிருஷ்டிகர் என்ற அதிகாரத்தால் அவர் அவ்வாறு கூறுகிறர். ஆணுக்கு துணையான பெண்ணை உருவாக்கி, வாழ்க்கையில் அவளுடைய பங்குகளை நியமிக்கும் போது மீண்டும் சிருஷ்டிகர் என்ற அதே அதிகாரத்தில் தான் அவ்வாறு செய்கிறார். எந்த ஒரு மனிதனும் தேவனுடைய அதிகாரம் அவருடைய கட்டளை, அவருடைய ஒழுங்கு முறை மீது சவால் விட்டு பெற்றுவிட முடியாது.

இந்தப் பொறுப்பை ஒரு மனிதன் ஏற்றுக்கொள்ள மறுக்கும் போது, குற்றம் சாட்டுகின்ற மகிழ்ச்சியில்லாத மனைவியோடு வேண்டா வெறுப்பாக வாழ வேண்டிவரும். தேவன் தன்னுடைய அதிகாரத்தால் சொன்ன கட்டளைக்கு இவன் கீழ்ப்படியாததுதான் இந்த எதிர்ப்புக்கு காரணம். தங்கள் கணவன்மார்களின் தலைமைத்துவத்தை ஏற்காத பெண்களுக்கும் இதே நிலை தான். தேவனோடு அவள் போர் செய்கிறவளாக காணப்படுவாள்.

இந்த உண்மையை ஆண்களும், பெண்களும் தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுப்பது அவசியம். நான் உனக்கு சொல்கிறேன் நீ இதை செய் என்று பெற்றோர் பிள்ளைகளிடத்தில் சொல்லக்கூடாது. அதே, நேரத்தில், தாங்கள் பெற்றோராய் இருப்பதால், பிள்ளைகளுக்காக தேவனுக்குப் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு இருப்பதால், நாங்கள் அப்படி செய்கிறோம் என்பதை வலியுறுத்த வேண்டும். இப்படிச் செய்வது அவர்களிடையேயுள்ள

பெற்றோருக்கு விரோதமாக எழும்பும் ஆத்திர குணம், உதாசினப்படுத்துதல் ஆகிய தன்மைகளை களைந்தெறியச் செய்ய உதவும். அத்தோடு கூட தேவனுடைய அதிகாரத்திற்கு அவர்கள் தங்களை தகுதிப்படுத்த அது பிரயோஜனமாயிருக்கும்.

**"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப் படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடிப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக"** (எபே. 6:1-4). **"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்கு எல்லா காரியத்திலேயும் கீழ்ப்படி யுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது" (கொலோ. 3:20).**

பிள்ளையானவன் தங்கள் பெற்றோர் தேவனுடைய அதிகாரத்தின் கீழே கொடுக்கப்பட்டவர்கள் என்பதை கட்டாயம் உணர வேண்டும். தேவனிடத்தில் அன்பு கூருதல், பெற்றோருக்கு கீழ்ப்படிதல், சட்டங்களுக்கு கீழ்ப்படிதல், இப்படியே ஆயிரக்கணக்கான ஒவ்வொரு காரியங்களுக்கும், பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் தங்கள் சொந்த இஷ்டப்படி அதிகாரம் செலுத்தவே கூடாது. பெற்றோர்கள் பிள்ளை வளர்ப்பு சம்பந்தமாக எப்படி தேவ சட்டத்திற்கு கீழ்ப்படிய வேண்டுமோ அதே போல் பிள்ளைகளும் பெற்றோருக்காக அல்லாமல் தேவனுக்காக அப்படிச் செய்ய வேண்டும்.

மனித உறவு என்ற சொத்துக்களை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அனுப்புவதென்பது பயத்துடனும், பொறுப்புடனும் செய்யப் படக் கூடிய வேலையாகும். குடும்பத்தலைவனாய் இருப்பதால் ஒரு கணவனுக்கு இதில் பங்குண்டு. ஆனால், மனைவியானவள் வீட்டிலிருந்து கொண்டு தன் பிள்ளைகளை போஷிக்கும் தனி சிலாக்கியம் பெற்றிருப்பதால், அவள் கணவனைக் காட்டிலும் பிள்ளைகளுக்கு அதிகம் கற்றுத்தர முடியம். இவைகள் நாம் பிடித்துக் கொள்ளும்படியாக நம் வாழ்க்கையில் கிடைத்த தேவ சித்தமாகும். இவைகளின்படி செய்கிற குடும்பங்கள் பாக்கியமுள்ளவைகள்.

**B.B. சோட்** **R.R. நாயகம்**

**ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்.**

**உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும். [1தீமோ. 2:11,12].**

வாலிபர் பகுதி

# இயேசுவின் சிநேகிதராவோம்

வாலிப நெஞ்சங்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களை இந்த கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பொதுவாக, வாலிபர்கள் நட்பு வட்டாரத்தை அதிகமாக விரும்புவார்கள். நல்ல நண்பன் தங்களுடைய வாழ்க்கையின் ஒரு அங்கமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். அப்படி ஒரு நண்பன் கிடைப்பான் என்று சொன்னால் என்ன விலை கொடுக்கவும் எதை வேண்டுமானாலும் இழக்கத் தயாராக இருக்கிறார்கள். இன்றைய நாட்களில் நட்பு என்பதற்கு வாலிபர்கள் கொடுக்கும் அர்த்தம் வேறு. அதாவது நல்ல நண்பன் என்பவன் தன்னோடு சினிமா பார்க்க வரவேண்டும், தன்னோடு கெட்ட பழக்க வழக்கங்களில் ஈடுபட வேண்டும் என்று அநேக வாலிபர்கள் நினைக்கின்றனர். இன்று நிலைமை என்னவென்றால் நாம் யாரையெல்லாம் நல்ல நண்பர்கள் என்று நினைக்கிறோமோ அவர்கள் நம்முடைய துன்ப வேலைகளில் நம்மை விட்டுப் பிரிந்து சென்று விடுவார்கள் அல்லது நம்மோடு நட்பு வைத்துக் கொண்டே உதவிச் செய்யமாட்டார்கள். எனவே தான் நம்மீது அக்கறை கொண்டு உண்மையான அன்பு செலுத்தி நமக்காக உயிரையேக் கொடுத்த இயேசுவை நம்முடைய நண்பராக்கிக் கொள்ள வேண்டும். அவர் எந்த சூழ்நிலையிலும் நம்மைக் கைவிடவேமாட்டார் அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். இயேசு கிறிஸ்து நமக்கு சிறந்த நண்பர் என்பதை தேவனுடைய வார்த்தையில் இருந்து நாம் கற்றுக்கொள்ளலாம். சரி, இயேசு கிறிஸ்து நமக்கு சிறந்த நண்பர் என்பதை பல வழிகளில் நாம் பார்ப்போம்.

**I. அவர் மரித்தோரிலிருந்து எழுந்து, இப்பொழுது எல்லாவற்றிற்கும் தலைவராக இருக்கிறார்.**

இயேசு நமக்காக வாழ்ந்து, பாடுபட்டு, இரத்தம் சிந்தி, மரித்தார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால், கிறிஸ்தவம் இயேசுவின் கல்லறையில் முடிவதில்லை! இதுதான் கிறிஸ்தவ மார்க்கத்தை மற்ற உலக மதங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. கிறிஸ்தவர்கள் மரித்த ஒரு தலைவருக்கு சேவை செய்வதில்லை! இயேசுவின் சீஷர்கள் இயேசுவின் கல்லறைக்கு வந்து அது காலியாக இருப்பதைக் கண்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதன்பின்பு தான் இரண்டு தேவதூதர்கள் அவர்களிடம் "உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்" என்றார்கள் (லூக்கா 24:5,6). ரோமர் 1:5யை வாசிக்கும் போது இயேசு கிறிஸ்து தேவ சுதன் என்று பலமாக நிரூபிக்கப்பட்டார். எப்படி நிரூபிக்கப்பட்டார்? மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததினால். இயேசுவின் உயிர்த்தெழுதல்

தான் கிறிஸ்தவ வாழ்க்கையின் அஸ்திபாரமாயிருக்கிறது. 1 பேதுரு 1:3,4 வசனங்களை நாம் வாசிக்கும் போது "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்".

வாலிப நெஞ்சங்களே! அந்த ஜீவனுள்ள நம்பிக்கையைப் பற்றி தேவன் என்ன கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள். அது அழியாத, மாசற்ற, வாடாத சுதந்திரமாக இருக்கிறது என்கிறார் தேவன். அந்த சுதந்திரம் நமக்கு பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது! அந்த ஜீவனுள்ள நம்பிக்கையுடைய உடையவர்களாயிருக்கிறபடியால் அவரிடம் எத்தனை நன்றியுடைய வர்களாய் இருக்க வேண்டும். இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததினால், தமக்கிருக்கும் ஜீவனுள்ள நம்பிக்கை நிச்சயமாகவே மகா பெரியது.

## II. இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கு முக்கியமான ஒன்றாகும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நித்திய ஜீவன் நம்பிக்கையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கை எவ்வளவு உறுதியானது பாருங்கள்! தேவன் அதை நமக்கு வாக்காக கொடுத்திருக்கிறார். அவர் பொய்யுரையாத தேவன். எபிரெயர் 6:18,19 வசனங்களில் அந்த நம்பிக்கை நமது ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. அந்த நங்கூரமான நம்பிக்கை உறுதியும், நிலையுமானதாக இருக்கிறது. அதுமாத்திரமல்ல அது திரைக்குள்ளாக போகிறதாக இருக்கிறது. அதாவது, நமது நம்பிக்கை பரலோகத்தில் இருக்கிறது. ஒரு கப்பலுக்கு நங்கூரம் ஏன் தேவைப்படுகிறது என்பதை சிந்தியுங்கள். புயல் வந்த போதிலும் ஒரு கப்பலை அது இருக்குமிடம் விட்டு காற்றினால் அடிபட்டு போய் விடாமல் இருக்க ஒரு நங்கூரம் பயன்படுகிறது என்பதை நாம் அறிவோம். வாலிபர்களாக இருக்கும் நாம் இவ்வாழ்க்கையில் சோதனை என்னும் புயலை சந்திப்போம். ஆனால், நமக்கு நிலையான உறுதியான ஓர் நங்கூரமிருக்கிறது. அந்த நங்கூரம் நமது நம்பிக்கையே. நாம் அந்த நம்பிக்கையை பற்றிக்கொண்டு இவ்வாழ்க்கையின் சோதனைகளை கடந்து வரவேண்டும், நாம் நிலை தவறாமல் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

எபிரெயர் 2:14,15 வசனங்களில் நாம் பார்க்கும் போது இயேசு தமது மரணத்தின் மூலமாக, மரணத்தின் அதிகாரியான பிசாசுக்கு இயேசு கிறிஸ்து மிகப்பெரிய அடியைக் கொடுத்தார். அத்தோடு, ஜீவகாலமெல்லாம் மரண பயத்திலிருக்கும் நம்மையும் அவர் விடுதலையாக்கி அந்த பயத்தை நீக்கியிருக்கிறார். நாம் எப்படி மாம்சமும், இரத்தமும் உடையவர்களாக இருக்கிறோமோ அப்படியே இயேசுவும் மாம்சமும், இரத்தமுடையவரானார்.

ஆனால் இயேசு மரணத்தை ஜெயித்தார். நாமும் அப்படி மரணத்தை ஜெயிப்போம் என்று அவர் வாக்குக் கொடுத்ததின் மூலம், நம்மை மரண பயம் என்ற அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி இருக்கிறார். ஆகையால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் சாவு எனக்கு ஆதாயம், மரித்து கிறிஸ்து வோடிருப்பது எவ்வளவு மேலானது என தைரியமாக கூற முடியும் (பிலிப் 1:21-23). 1கொரிந்தியர் பதினைந்தாம் அதிகாரம் இயேசு கிறிஸ்து மரித் தோரிலிருந்து உயிரோடு எழுந்ததைப் பற்றியும், நாமும் அப்படி எழுப்பப் படுவோம் என்பது பற்றியும் பேசுகிறது. இயேசு கிறிஸ்து வேத வாக்கியங்களின்படியே மரித்து அடக்கம் பண்ணப்பட்டு வேத வாக்கியங் களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். நமது இரட்சகரும், ஆண்ட வருமாகிய இயேசு இவைகளை நமக்காக அன்போடு செய்ததின் மூலம் நாம் பாவத்தின் மீதும், மரணத்தின் மீதும் ஜெயம் கொள்ளுகிறோம். இதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

வாலிப நெஞ்சங்களே! இதுகாறும் வேத வசனங்களின் வெளிச்சத்தில் இயேசு கிறிஸ்து எப்படி நம்முடைய சிறந்த நண்பராயிருக்கிறார், அவர் நமக்காக என்னென்னப்பாடுகளைப்பட்டிருக்கிறார் என்று பார்த்தோம். இயேசு நம்முடைய நண்பராவதற்கு எத்தனையோ தியாகங்களை செய்திருக் கிறார். இப்போது இயேசுவை நம்முடைய சிறந்த நண்பராக்கிக் கொள்ள நீங்கள் ஆயத்தமா? இயேசு நம்முடைய நண்பராக இருக்கும் போது நம்முடைய கவலைகளை நாம் சுமக்க வேண்டியதில்லை கவலைகளை யெல்லாம் அவர் மேல் வைத்துவிடலாம். ஏனென்றால், அவர் நம்மை விசாரிக்கிறவர். இயேசுவைப் போல ஒரு சிறந்த நண்பரை நாம் எப்போதுமே பெற்றுக்கொள்ள முடியாது ஏனென்றால், அவர் நமக்காக தம்முடைய ஜீவனையேக் கொடுத்து அன்பு செலுத்தியிருக்கிறார். இயேசுவுக்கு நண்பராக நாம் பெரிதாக ஒன்றையும் செய்ய வேண்டியதில்லை. நாம் செய்ய வேண்டிய தெல்லாம் அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளுவதுதான்!

**பென்னிமார்ட்டின்.**

## நீங்கள் யாருக்கு சிநேகிதர்?

ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்தி லுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்

- இயேசு கிறிஸ்து [யோவா 15:13,14]

சிறுவர் பகுதி

# அந்த ஜலம்! அந்த மிருகங்கள்!!



எனதருமை சிறுதம்பி தங்கைகளே, உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மாதந்தோறும் சிறுவர் பகுதி மூலம் வெளிவரும் செய்திகள் பயனுள்ளதாக இருக்கும் என விசுவாசிக்கிறேன். சரி இந்த மாதம் என்ன பாடம் என்று பார்ப்போம்.

முன்பு ஒரு காலத்திலே பாவம் அதிகமானபோது தேவன் தம்முடைய உத்தம வேலையாளான நோவாவிடம் ஜலத்தை கொண்டு பூமியை அழிக்கப்போவதாக கூறினார். ஆனால் இவன் தேவனுக்கு கீழ்ப்படிந்து இருந்ததினால் தன் குடும்பத்தை காப்பாற்றிக் கொள்ள ஒரு பேழையை கட்டும்படி கூறினார். அதோடு பேழைக்குள் மிருகங்களையும் வைத்துக் கொள்ளுமாறு கூறினார்.

நீங்கள் எப்போதாவது எத்தனை மிருகங்களை உள்ளே இருந்தது என்றும் எவ்வாறு அவைகளை நோவா பாதுகாத்திருப்பார் என்றும் நினைத் திருக்கிறீர்களா?

ஆராய்ச்சியாளர்கள் 16,000 மிருகங்கள் நோவாவின் பேழைக்குள் இருந்ததாக கூறுகிறார்கள். தேவன் நிலத்தில் வாழும் மிருகங்களைத் தான் பேழைக்குள் கொண்டு செல்லச் சொன்னார் என்பதை மறந்துவிடாதீர்கள் (ஆதி. 7:21-22). சில மிருகங்கள் குருவியை போல் சிறியதாகவும், சில மிருகங்கள் டைனோசர் போல பெரியதாகவும் இருந்திருக்கலாம். வேதம் நோவா வயதான மிருகங்களை பேழைக்குள் ஏற்றினார் என்று சொல்ல வில்லை. ஆனால், மிருகங்களின் குட்டிகளை ஒருவேலை எடுத்துச் சென்றிருக்கலாம் என்று கூறுகிறார்கள். அதை ஒருவேலை அவர் செய்திருந்தால் இடமும் மிச்சமிருந்திருக்கும், உணவும் அதிகமாக எடுத்துச் சென்றிருக்க தேவையில்லை.

சரி, எப்படி நோவா எல்லா மிருகங்களையும் பேழைக்குள்ளாக கொண்டு வந்தான். நோவா அவைகளை வரிசைபடுத்தி அழைத்து வரவில்லை. மாறாக தேவன் மிருகங்களை நோவாவிடம் வரச் செய்தார் (ஆதி. 6:19-20). இதை போலவே தானி 6:22ல் சிங்கத்தின் வாயை கட்டிப் போட்டதனிமித்தம் தானியேல் தப்பிக்கப்பட்டான். ஆக மிருகங்களின் வழியாகவும் தேவன் அற்புதங்களை செய்தார். மேலும் எண் 22:22-28ல் கழுதையை பேசவைத்தார். தேவன் பெயரிடுவதற்காக மிருகங்களை

ஆதாமிடம் கொண்டு வந்தாரானால், நோவாவின் பேழைக்கு அவைகளை காப்பாற்ற வரவழைத்தது சாத்தியமே.

சரி, எப்படி நோவா அவைகளை பராமரித்தார்? ஆதி 8:1ல் தேவன் நோவாவையும் எல்லா மிருகங்களையும் "நினைத்தார்" என்று சொல்லுகிறது. அதற்கு அர்த்தம் தேவன் அவைகளை பராமரித்து வந்தார். இதை தேவன் எப்படி செய்தார் என்று நமக்குத் தெரியாது. சில மிருகங்கள் பல மாதங்களுக்கு தூங்கும்படியாக அவை வடிவமைத்தார். (Hibenating Animals)

ஆக 40 நாள் மழை முடிந்து ஜலம் பூமியை நிரப்பினது. எல்லா ஜனங்களும், பூமியில் வாழ்ந்த மற்ற மிருகங்களும், பறவைகளும் அழிந்து போயின (ஆதி. 7:21-23) அது நோவாவுக்கும் அவன் குடும்பத்திற்கும் ஒரு சோகத்தை கண்டிப்பாக ஏற்படுத்தியிருக்கும்.

அவர்கள் வீடு அழிந்திருக்கும், சொந்தங்கள் ஜலத்தில் மூழ்கி இறந்திருப்பார்கள். அவர்கள் பார்த்த பூமியை இனி ஒரு காலும் காண முடியாது என்ற காரணங்களினால் அவர்கள் சோர்ந்திருக்க வாய்ப்பிருக்கிறது.

பாருங்கள், எவ்வளவு நல்ல பாடங்கள் நமக்கு இந்த ஜலப்பிரளயத்தின் மூலம் கிடைக்கிறது. மிக முக்கியமான பாடம் தேவனுக்கு கீழ்ப்படிந்திருக்குதலின் அவசியம் ஆகும். இந்த சிறுவயதிலிருந்தே அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து நாம் செயல்படுவது நமக்கு ஆசீர்வாதத்தை தரும் என்பதில் நமக்கு எந்த சந்தேகமும் இல்லை.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

**R.A.R. நாயகம்**

## தபால் அலுவலகத்தில் விமான டிக்கெட்டுகள்

**ஏர்டெக்கான் விமான டிக்கெட்டுகள் எல்லா தலைமைத் தபால் அலுவலகங்களிலும் கீழ்க்கண்ட தபால் அலுவலகங்களிலும் கிடைக்கும்.**

1. ஈரோடு ஆட்சியர் அலுவலகம் தபால் நிலையம்.
2. பெருந்துறை தபால் நிலையம்.
3. அந்தியூர் தபால் நிலையம்.
4. சித்தோடு தபால் நிலையம்.
5. ஊத்துக்குளி தபால் நிலையம்.
6. சக்தி நகர் தபால் நிலையம்.
7. குன்னத்தூர் தபால் நிலையம்.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த மாதம் இயேசு கிறிஸ்து ஸ்தாபித்த ஒன்றான மெய் சபையிலிருந்தும், புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்தும் வழிவிலகிச் செல்லுதலைப் பற்றியும், கள்ளப் போதகர்களின் வருகையைப் பற்றியும் சில குறிப்பிடத்தக்க தீர்க்கதரிசனங்களைப் பற்றியும் நாம் படிக்கத் தொடங்கினோம். மத்தேயு 7:13-15 வசனங்களில் குறிப்பிட்டிருக்கிறபடி நம்முடைய அருமை இரட்சகர் இந்த பாடத்தைக் குறித்து என்ன சொன்னார் என்பதை விவரமாக ஆராய்ந்தோம். மேலும் நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:28-32 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடியே அப்போஸ்தலனாகிய பவுல் என்ன சொன்னார் என்பதை படித்துக் கொண்டிருந்தோம்.

நாம் ஏற்கனவே பார்த்தபடி எபேசுப் பட்டணத்திலிருந்த கிறிஸ்துவின் சபையின் மூப்பர்களுக்கு எச்சரிப்பை விடுக்கிறார் அதாவது தான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் மூப்பர்களிலிருந்து எழும்பி சபையை அழிக்க முயற்சி செய்வார்கள் என்றும், மூப்பர்களிடத்திலிருந்து சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று பவுல் எச்சரித்தார். அதாவது அந்த மூப்பர்கள் சீஷர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்குப் பதிலாக தங்களைப் பின்பற்றும்படி அவர்களை தங்களிடத்தில் இழுத்துக் கொள்வார்கள் என்றும் பவுல் எச்சரித்தார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:28-32 வசனங்களை மறுபடியும் வாசியுங்கள். இப்படிப்பட்ட ஆச்சரியமான முன்னறிவிப்பைச் செய்தப் பிறகு பவுல் அந்த மூப்பர்கள் என்னச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்? மூப்பர்கள் விழித்திருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார், அதாவது, புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து வழி விலகிச் செல்லாதபடி அவர்கள் தங்களை காத்துக் கொள்ள வேண்டும் என்று பவுல் எச்சரித்தார். அது மாத்திரமல்ல, பிரியமான அப்போஸ்தலன் தான் மூப்பர்களோடு இருந்த போது தன்னுடைய செயல்பாடுகளை அவர்களுக்கு நினைவுபடுத்தினர். அதவாது பவுல் மூன்று வருஷ காலமாய் இரவும், பகலும் கண்ணீரோடு இடைவிடாமல் அவர்களை எச்சரித்து வந்தார். இங்கே நாம் பார்க்கும் போது பவுல் தன்னுடைய மாதிரியைப் பின்பற்றும்படி மூப்பர்களுக்கு அழைப்பு விடுக்கிறார். எனவே, நீங்களும், நானும் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால், இப்படிப்பட்ட அன்பான, உறுதியான எச்சரிப்புகளை விடுக்க வேண்டும்.

கிறிஸ்துவின் அப்போஸ்தலர் வேறு எதைச் செய்தார்? அவர் மூப்பர்கள் மற்றும் சகோதரர்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் அவர்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் அவர்களை ஒப்புக்கொடுக்கிறார்.

எனவே, நீங்களும் நானும் வழிவிலகிச் செல்லுதலைத் தடுக்க உண்மையாக தேவனுக்கு நாம் சேவைச் செய்ய வேண்டும். நாம் எப்போதும் அவருடைய சித்தத்தை நிர்ணயிக்க வேத வசனத்துக்குச் செல்ல வேண்டும். பின்பு நாம் முழு மனதோடு அவருடைய சித்தத்தைப் போதித்து அதன்படிச் செய்ய வேண்டும்.

**2கொரிந்தியர் 11:13-15** வசனங்களில் நாம் பார்க்கும் போது தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் முதல் நூற்றாண்டிலேயே கள்ள அப்போஸ்தலர்களும், கபடமுள்ள வேலையாட்களும் இருந்ததாக கூறுகிறார். அந்த மனிதர்களை பவுல் எப்படியாக விவரிக்கிறார்? அவர்கள் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டார்கள் என்று பவுல் கூறுகிறார்.

ஆனால், பிரியமானவர்களே இதை ஜாக்கிரதையாய் கவனியுங்கள். இந்த துன்மார்க்கமான மனிதர்கள் உண்மையிலேயே சாத்தானுடைய வேலையாட்கள்! மேலும் பவுல் சாத்தானை எப்படியாக விவரிக்கிறார்? பவுல் சாத்தானை ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டவனாக விவரிக்கிறார். தெளிவாகவே சாத்தான் மற்றும் அவனைப் பின்பற்றுபவர்களுடைய ஆயுதங்களுள் ஒன்று வஞ்சனை!.

எனவே, தேவன் இந்த வசனப்பகுதிகளில் சொல்கின்ற காரியங்களிலிருந்து கள்ளப்போதகர்கள், சாத்தானுடைய துன்மார்க்கமான வேலைகளை முதல் நூற்றாண்டிலேயே நடப்பித்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். அதைப்போலவே இந்நாட்களிலும் இந்த துன்மார்க்கமான மனிதர்கள் சாத்தானின் கிரியைகளை நடப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் (1யோவான் 4:1; 5:19).

ஆனால், துன்மார்க்கனைப் பின்பற்றுபவர்களின் முடிவு என்ன? பிரியமான அப்போஸ்தலன் இவர்களுடைய கிரியைகளுக்கேற்ப இவர்களுடைய முடிவு இருக்கும் என்று சொன்னார். நாம் ஏற்கனவேப் படித்த படி இவர்களுடைய கிரியைகள் துன்மார்க்கமானவைகள். எனவே, தேவனைப் பொறுத்தவரை இவர்களுடைய முடிவு அக்கினி ஜுவாலையாகும். அதுமாத்திரமல்ல இவர்கள் நித்தியமமாக தேவனிடமிருந்து பிரிந்து விடுவார்கள் (2தெசலோனிக்கேயர் 1:7-9). இது மிகவும் சோககரமானதும், பரிதாபகரமானதுமாகும். ஆனால், இது உண்மையாகும்!.

2தெசலோனிக்கேயர் 2:3-12 வசனங்களில் தேவன் பவுல் மூலமாக ஆச்சரியமூட்டும் தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். பவுல் இங்கே எதை விவரிக்கிறார்? வழிவலகிச் செல்லுதல் இருக்கும் என்று பவுல் கூறுகிறார். தெளிவாகவே, தேவன் புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்தும், இயேசு தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்த ஒன்றான மெய் சபையிலிருந்தும் வழிவிலகிச் செல்லுதல் காணப்படும் என்று கூறுகிறார்.

தேவன் தம்முடைய அனந்த ஞானத்தினால் அந்த வழிவிலகிச் செல்லுதலோடு ஈடுபடுத்தப்பட்டிருக்கிற சில குறிப்பிடத்தக்க காரியங்களை விவரித்திருக்கிறார். உதாரணமாக, இங்கே பாவ மனுஷர்கள் தேவனெனப்

படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவர்களையும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவர் களாயும் இருப்பார்கள்.

ஏழாம் வசனத்தின்படி இந்த அக்கிரமம் ஏற்கனவே கிரியை செய்து கொண்டிருந்தது என்பது முதல் நூற்றாண்டிலேயே தேவன் பவுலைக் கொண்டு இந்த காரியங்களை வெளிப்படுத்தியதால் அறியப்படுகிறது ஒன்பது, பத்து வசனங்களின்படி வஞ்சகமான பொய்யான அற்புதங்கள் போன்றவைகள் எல்லாம் பாவ மனுஷர்கள் எழும்புவதோடு சம்பந்தப்பட்ட வைகள். பத்தம் வசனத்தில் இப்படிப்பட்டவர்கள் அநீதியினால் உண்டாகும் வஞ்சகத்தை தங்களுடைய துன்மார்க்கமான கிரியையை நடப்பிக்கப் பயன் படுத்துவார்கள் என்று காணமுடியும்.

இந்த பாவமனுஷர்கள் எவ்வகையான மக்கள்மீது ஜெயம் கொள்ளு வார்கள்? தயவு செய்து 10-12 வசனங்களை மிக ஜாக்கிரதையாக வாசியுங்கள். இந்த துன்மார்க்கமானத் தலைவர்கள் சத்தியத்தை நேசிக்காத வர்களையும், தேவனுடைய வார்த்தையை விசுவாசியாதவர்களையும், அநீதியில் பிரியப்படுகிறவர்களையும் வஞ்சிப்பார்கள்.

இந்த துன் மார்க்கமான தலைவர்களுக்கும், அவர்களைப் பின்பற்றாத வர்களுக்கும் முடிவு என்னவாயிருக்கும்? அவர்கள் அழிந்து போவார்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள், இரட்சிக்கப்படமாட்டார்கள். ஆனால், தயவு செய்து ஒரு காரியத்தை யோசித்துப் பாருங்கள் பிரியமான வர்களே! நீங்களும், நானும் சத்தியத்தை நேசிக்காமல், தேவனுடைய வார்த்தையை விசுவாசியாமல், அநீதியில் பிரியப்படுகிறவர்களாயிருந்தால் நாமும் அழிந்துபோம், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவோம், நாமும் இரட்சிக்கப்படமாட்டோம்!.

இந்த குறிப்பிடத்தக்க தீர்க்கதரிசனம் ரோமக்கத்தோலிக்க சபையிலும், அவைகளின் போப்களிலும் எப்படி நிறைவேறியிருக்கிறது என்பதை நாம் பார்ப்போம். இந்த போப்கள் தங்களை எல்லோரைக் காட்டிலும் மேலாக எண்ணி தங்களைப் பின்பற்றுபவர்கள் தங்களை ஆராதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள். நான் இந்த வாக்கியத்தை தேவனுக்கான மிகுந்த அன்புடனும், அப்படிப்பட்ட மனிதர்களுக்கான அன்புடனும் அமைக்கிறேன்.

1தீமோத்தேயு 4:1-3 வசனங்களை வாசிக்கும் போது தேவனிடத் திலிருந்து வரும் ஆச்சரியமான வெளிப்பாட்டை நாம் காண முடியும். பரிசுத்த ஆவியானவர் தெளிவாக என்ன சொல்கிறார்? சிலர் விசுவாசத்தை விட்டு விலகிச் செல்வார்கள் என்று சொல்கிறார். இங்கே விசுவாசம் என்பது புதிய ஏற்பாடாகிய சுவிசேஷமாயிருக்கிறது (பிலிப்பியர் 1:27). எனவே பரிசுத்த ஆவியானவர் சில கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து வழி விலகிச் செல்லும் காலம் வரும் என தீர்க்கதரிசனம் உரைக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் இந்த கிறிஸ்தவர்களை எப்படியாக விவரிக்கிறார்? பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்

களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போனார்கள் என்று விவரிக்கிறார். மேலும் இந்த துன்மார்க்கமான மனிதர்கள் போதிக்கும் வேறு காரியங்கள் என்ன? ஜனங்கள் விவாகம் பண்ணுவதைத் தடை செய்வார்கள்!.

பிரியமானவர்களே, உங்களுக்குத் தெரிந்த எந்த மத அமைப்பாவது அதன் பாதிரியார்களையும், கன்னிகளையும் விவாகம் செய்ய தடை செய்கிறதா? வேத வசனங்களின்படி விவாகம் செய்ய தகுதி பெற்றவர்கள் யாவருக்குள்ளும் விவாகம் கனமுள்ளதாயிருக்கிறது என்று தேவன் சொல்கிறார் (எபிரெயர் 13:4) எனவே மதகுருக்களும், கன்னிகளும் திருமணம் செய்யக் கூடாது என்ற கள்ள போதனை புதிய ஏற்பாட்டு மாதிரியிருந்து வழிவிலகிச் செல்லுதலோடு சம்மந்தப்பட்டிருக்கிறது இப்படி சம்பவிக்கும் என்று தேவன் தீர்க்கதரிசனம் உரைத்தார் அது அப்படியே சரியாக நடந்தேறியது.

இந்த மனிதர்கள் வேறு எதையெல்லாம் போதிப்பார்கள்? விசுவாசிகளும், சத்தியத்தை அறிந்தவர்களும், ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று போதிப்பார்கள்! ரோமக்கத்தோலிக்க சபையானது வெள்ளிக் கிழமைகளில் மாமிசம் உண்பதை முன்பு தடை செய்திருந்தது என்பது எல்லோரும் அறிந்த உண்மையாயிருக்கிறது. ஆனால், பிரியமானவர்களே, தேவனைப் பொறுத்த வரை இந்த உபதேசமும், விவாகம் பண்ணத் தடைச் செய்கிறதுப் பிசாசின் உபதேசங்களாகவும், விசுவாசமாகிய கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டிலிருந்து விலகிச் சென்ற மத அமைப்புகளின் அடையாளமுமாயிருக்கிறது.

2தீமோத்தேயு 4:3,4 வசனங்களை நாம் வாசிக்கும் போது இங்கே சில ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் இருக்கக் கூடிய காலம் வரும் என்று தேவன் சொல்கிறார். அதாவது, இவர்கள் புதிய ஏற்பாட்டின் ஆரோக்கியமான உபதேசத்தில் திருப்தி அடையமாட்டார்கள். ஆரோக்கியமான உபதேசத்துக்கு மாறாக தங்கள் சுய இச்சைகளினாலே வழி நடத்தப்படுவார்கள். அவர்கள் சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுகதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும், மேலும் அவர்கள் புதிய ஏற்பாட்டின் தூய்மையான சத்தியத்திற்கு பதிலாக தங்கள் சுய இச்சைகளைப் பூர்த்திச் செய்ய தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாக சேர்த்துக் கொள்வார்கள். இன்று இது போன்ற வசனங்களிலிருந்து நாம் எதை கற்றுக் கொள்ள வேண்டும்? சபையிலே போதிப்பவர்கள், பிரசங்கிப்பவர்கள் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டின் ஆரோக்கியமான உபதேசத்தை மாத்திரம் பேச வேண்டும். பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்த வேண்டும் ஜனங்கள் விரும்புகிறார்கள் என்பதற்காக ஜனங்களை பிரியப்படுத்த மென்மையான, இதமான வார்த்தைகளைப் பேசக்கூடாது.

**2பேதுரு 2:1-3 வசனங்களில்** பேதுரு எதை தீர்க்கதரிசனமாக உரைக்க தேவன் பேருதுவை ஏவினார்? தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் கள்ளத் தீர்க்கதரிசிகளும், ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள் எத்தனை ஆச்சரியமூட்டும் தீர்க்கதரிசனமாய் இது இருக்கிறது என்று பாருங்கள்!.

இந்த கள்ளப்போதகர்கள் என்னச் செய்வார்கள் என்று தேவன் சொல்கிறார்? அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் சபையிலே நுழையப்பண்ணி பொருளாசையுடையவர்களாய் தந்திரமான வார்த்தைகளால் கிறிஸ்தவர்களை தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள். அப்போது வாழ்ந்த கள்ளப் போதகர்களுக்கும், இப்போது வாழ்கின்ற கள்ளப்போதகர்களுக்கும் அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் என்ன காத்திருக்கிறது? அவர்கள் தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள் என்று தேவன் சொல்கிறார். இந்த கள்ளப் போதகர்கள் தேவனிடமிருந்து நித்தியமாக பிரிந்து விடுவார்கள் என்று தேவன் சொல்கிறார்! மறுபடியும் இது சோககரமானது, ஆனால், இது தேவனுடைய சத்தியமாயிருக்கிறது.

அடுத்த மாதம், இந்தப் பாடத்தைக் குறித்த 2பேதுரு 2:1-3 மற்றும் அநேக முக்கியமான வசனப்பகுதிகளை படித்து முடிக்க உத்தேசித்திருக் கிறோம். அதன் பிறகு, கர்த்தருக்குச் சித்தமானால் இயேசுவும், அவருடைய அப்போஸ்தலர்களும் வழிவிலகிச் செல்லுதலைப் பற்றிய தீர்க்கதரிசனம் உரைத்ததையும் அது அப்படியே நிறைவேறியதையும் நாம் பார்ப்போம்.

***Charlie Dipalma*** ***Benny Martin***

## நாளும் நடப்பும்

1. **பின்லேடன் பாகிஸ்தானில் இல்லை பாகிஸ்தான் பாதுகாப்பு துறை அமைச்சர் திட்டவட்ட அறிவிப்பு.**
2. **பி.எஸ்.எல்.வி. ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி இந்தியா சாதனை.**
3. **பிளஸ் 2 தேர்வு முடிவு 87.3% மாணவிகள், 81.3% மாணவர்கள் தேர்ச்சி.**
4. **தாலிபான் பயங்கரவாதிகளின் தாக்குதலில் இருந்து ஆப்கன் அதிபர் கர்சாய் உயிர் தப்பினார்.**
5. **கச்சா எண்ணெய் உயர்வால், இந்திய பெட்ரோல் நிறுவனத்திற்கு தினசரி ரூ 450 கோடி நஷ்டம்.**
6. **விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த 2 நகரங்களை இலங்கை இராணுவம் கைப்பற்றியது.**
7. **"தமிழகத்தில் மின்தடையே இருக்காது" மின்சார துறை அமைச்சர் தகவல்.**
8. **பொறியியல் படிப்பில் சேர குறைந்த பட்சமாக மார்க் 55% ஆக குறைப்பு.**
9. **மியான்மரில் கடும் புயலால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர்.**

# உண்மையோடு தொழுதுகொள்ளுகிறாயா?

நம்மை உண்டாக்கின நம் சிருஷ்டிகராகிய தேவனை நாம் கனப்படுத்தும் செய்கையே தொழுது கொள்ளுதல் என்கிறோம். உலகம் எங்கும் மனுஷரை தேவன் குடியிருக்கச் செய்ததின் நோக்கமே மக்கள் தேவனைத் தடவியாகிலும் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் (அப். 17:26,27) நியாயப்படி நாம் அவருக்குப் பயந்து அவர் ஒருவருக்கே ஆராதனை செய்ய வேண்டும்! ஆண்டவர் இயேசுவும் இதை வலியுறுத்து கிறார் (மத். 4:10, யோவான் 4:24) உண்மையோடு தொழுது கொள்வது பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாக பார்ப்போம்.

## I. ஆராதனைக்கு ஆயத்தம் உண்டா?

நமக்கு திருஷ்டாந்தமாகவும், நிழலாகவும் உள்ள பழைய உடன் படிக்கையில் தேவன் ஓய்வு நாள் விசேஷப்படுத்தி அதற்கு ஆயத்தமாகும் நாளைப் பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் (யாத். 16:29; மாற்கு 15:42) இதற்கு ஒப்பனையாக புதிய உடன்படிக்கையின் விசேஷித்த நாளாகிய வாரத்தின் முதல் நாள் (ஞாயிற்றுக்கிழமை) நாம் ஆராதிக்கின்ற நாளாய் இருப்பதினாலே சனிக்கிழமை நமக்கு ஆயத்த நாளாக இருப்பதை நாம் கவனத்தில் கொண்டு பயபக்தியோடு நாம் ஆயத்தமாக வேண்டும். சிலர் சனிக்கிழமை இரவு நீண்ட நேரம் கண் விழித்து மறுநாள் ஆராதனையில் உற்சாகமின்றிக் கலந்து கொள்வது தேவ **விசாரணைக்குரியதாயிருக்கிறது** (எண் 15:32-36). எனவே, ஆராதனைக்கு நம்மை தயார் செய்து கொள்ள வேண்டியது (2தீமோ. 2:21,22) அவசியமாகும்.

## II. உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துகிறாயா?

அநேகர் நினைப்பது போல் ஞானஸ்நானத்திற்கு கீழ்படிவது மட்டுமே போதுமானது அல்ல. தொடர்ந்து நம்முடைய குறைகளைக் களைந்து தேவனுக்கு முன்பாக நிற்க பிரயாசப்படுவது மிகவும் அவசியமாகும். அதற்கு உறுதுணையாய் இருப்பது ஆராதனையாகும். உலக வாழ்க்கையில் நாம் கறைப்பட்டுக் கொண்டே இருக்கிறோம் (யூதா 23-25). அவைகளை தேவ சமூகத்தில் அறிக்கையிட்டு நம்மை பரிசுத்தப்படுத்திக்கொள்வது (1 கொரி. 11:28-31, 1 யோவான் 1:7-9) ஆராதனையின் மிக முக்கியப் பங்காக இருக்கிறது (ரோம 12:12) அதுவே புத்தியுள்ள ஆராதனையாக இருக்கிறது. பாவத்தோடு அனுசரிக்கும் ஜெபமோ, துதியோ தேவசமூகத்தில் செல்லாது.

## III. பயபக்தியோடு கலந்துகொள்கிறாயா?

நம்முடைய **தேவபயத்தை** வெறும் பேச்சிலே அல்ல அவருடைய வார்த்தைக்குக் கீழ்படிவதின் மூலமே காண்பிக்க வேண்டும். **தேவ பக்தி** என்பது நாம் அவரிடத்தில் அன்பு கூர்ந்து நம் வாழ்க்கையில் அவருக்கு முதலிடம் கொடுப்பதாகும் (மத். 22:37) தேவ சித்தத்தை நிறைவேற்ற வந்த ஆண்டவர், ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை

கைக்கொள்ள வேண்டும் என்றார் (யோவா 14:15). அதுவே பயபக்தி நாம் **நேரப்படி ஆராதனையில் கலந்து கொள்வது** நமது பயபக்தியை தெரிவிக்கும் அளவுகோலாகும். அவருக்கு பயந்தவர்களுக்கு தேவன் நன்மைகளை வழங்கும் இரக்கமுள்ள தகப்பனாக இருக்கிறார்.

## IV. மனமகிழ்ச்சியோடு ஆராதிக்கின்றாயா?

உண்மைக் கிறிஸ்தவர்களின் ஆராதனை மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். சிலர் சபைக்கு ஒருவிதக் கட்டாயத்தோடும், இறுக்கமான சிந்தையோடும் வருவார்கள். எனக்கன்பான சகோதரனே, சகோதரியே தேவன் நம் வாழ்வில் எவ்வளவாய் நன்மைகளைச் செய்து ஜீவனோடும் சுவாசத்தோடும் நம்மை வைத்துள்ளார்? (சங். 116:12,13,17) அதற்காக நாம் மகிழ்ச்சியோடு துதிக்க வேண்டாமா? நீ ஆராதனையில் எரிச்சலோடும், வருத்தத்தோடும் காணப்பட்டால் ஒருவேளை பிசாசானவன் சந்தோஷப் படலாம். ஏனெனில் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பது தான் நம் பெலன் (நெகே 8:10). எனவே, பிசாசு வெட்கப்படும்படி நாம் இனி மனமகிழ்ச்சி யோடே ஆராதனையில் காணப்படுவோமாக (2 நாளா 29:30, சங். 100:2).

ஆண்டவர் இயேசு சொன்ன ஆவியோடும், உண்மையோடும் என்பதில் ஆவியோடு ஆராதனை என்பதை மக்கள் தவறாக புரிந்து கொண்டு கைதட்டி கூக்குரலிட்டு ஆர்ப்பாட்டம் செய்வதைக் காண்கிறோம். நம்மில் இருக்கும் உள்ளான மனுஷனாகிய ஆவியோடு நாம் தேவனை கனப் படுத்துவதே அதன் உள்ளான அர்த்தமாக இருக்கிறது. பவுல் அத்தேனே பட்டணத்தில் விக்கிரகங்களைப் பார்த்த போது **ஆவியில்** வைராக்கியங் கொண்டு (அப். 17:16) சரியான சத்தியத்தை அமைதலோடு தெளிவாகப் பிரசங்கித்தானே தவிர கூக்குரலிடவில்லை. மாறாக தெய்வமல்லாத விக்கிரகங்களை வணங்குபவர்களே கூக்குரலிடுவார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகளே நம்முடைய சிருஷ்டிகர் நமக்காக அநேக நன்மைகளை செய்திருப்பதால் நாம் அவருக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறோம். நம்முடைய தேவைகளில் ஆபத்தில், வியாதியில் நாம் வேண்டிக் கொள்வதற்கும் அதிகமாக நம் ஜெபத்திற்கு பதிலளித்த தேவனை நாம் கனப்படுத்த வேண்டும். யாரை தொழுது கொள்ள வேண்டும் என்ற கேள்விக்கு பதிலாக ஆண்டவர் இயேசுவின் மூலமாக எப்படி நாம் பரலோகத்தின் தேவனிடம் ஜெபிக்கிறோமோ, அவரையே இயேசுவின் நாமத்தில் நாம் தொழுது கொள்கிறோம். (எபேசி. 5:19,20, கொலே 3:17) வாழ்க்கையில் நெருக்கத்தை சந்தித்த எசேக்கியா ராஜா தேவ சமூகத்தை சேர்ந்து வெற்றி பெற்றான் (ஏசா 37:1)

நம்முடைய வாழ்விலும் நமக்கு நேரிடுகிற இடுக்கணில் உதவி செய்ப வராகவும், ஆறுதல் அளிப்பவராகவும் நம்முடைய பிதாவாகிய தேவனே இருப்பதால் (2கொரி. 1:3,4) நாம் மனமகிழச்சியோடு ஆராதனையில் கலந்து கொள்வோம். எல்லாவற்றிற்கும் மேலாக நம் ஆத்துமா பாதாளத்தில் அழியாமல் தப்புவித்திருக்கிற வல்லமையுள்ள தேவனை நாம் (சங். 30:3) ஆயத்தத்தோடும், பரிசுத்தத்தோடும், பயபக்தியோடும், மனமகிழ்ச்சியோடும் அதாவது ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்போமாக, தேவ கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென்.

**சகோ. K. பாண்டியன்,** பாண்டிச்சேரி-10

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

## பாடம் - 9. அப்போஸ்தலனாகிய பற்தொலொமேயு

**அ**ன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல. இத்தொடர் கட்டுரை உங்கள் அனைவருக்கும் எழுச்சி உண்டாக்கும் என்று நம்புகிறேன். அப்போஸ்தலர்களின் இரத்த சாட்சிகளை படிக்கும்போது அதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் மிக முக்கியமாக உள்ளது. நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் அன்பு, தியாகம், கருணை, மற்றவர்களுக்காக நம்மை அர்ப்பணித்தல் போன்ற குணாதிசயங்களையுடையவர்களாக இருந்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தை நமது சரீரத்தில் தரித்துக் கொள்வோமாக!

இம்மாதத்தில் **அப்போஸ்தலனாகிய பற்தொலொமேயுவைக்** குறித்தும், அவரது தியாக மரணத்தைக் குறித்துப் பார்ப்போமாக.

### I. பற்தொலொமேயுவின் வாழ்க்கைக் குறிப்பு

இவர் இயேசுவின் அழைப்பைப் பெறுவதற்கு முன் கலிலேயாக் கடலில் மீன் பிடிக்கும் தொழிலைச் செய்து வந்திருக்கிறார். இவரது தந்தை பெயர் தல்மேயு, கலிலேயா பகுதியைச் சார்ந்தவர். பக்தியுள்ள யூத குடும்பம். மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களை நன்றாக படித்து அறிந்தவர். இவரும், பிலிப்புவும் நண்பர்களாக இருந்துள்ளனர். ஒருவேளை இவர்கள் இருவரும் ஒன்றாக மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கலாம் அல்லது கூட்டாளியாக இருந்திருக்கலாம்.

இவரை மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் பற்தொலொமேயு என்றும் யோவான் சுவிசேஷத்தில் மட்டும் நாத்தான்வேல் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (யோவா 1:45) அப்போஸ்தலனாகிய பிலிப்புவைப் போல இவரும் வேதத்தை நன்றாக ஆராய்ந்து படிக்கக் கூடியவர். குறிப்பாக மேசியாவின் பிறப்பு, ஊழியம், அவரது ராஜ்யம் போன்றவற்றை அதிகமாக ஆராயக்கூடியவர். இயேசு இவரை முதன் முதலில் பார்த்தபொழுது இவர் அத்திமரத்தின் கீழ் இருந்தார் (யோ 1:48).

இவர் மனிதனுடைய வார்த்தைகளில் இருக்கும் நம்பிக்கையைவிட கர்த்தருடைய வேதத்தில் அதிக நம்பிக்கை வைத்திருந்தார். எனவே தான் பிலிப்பு இவரிடம் நியாயப்பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம். அவர் யோசேயப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான் (யோவா. 1:45) அதற்கு நாத்தான்வேல், நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா என்றான். அதற்குப் பிலிப்பு வந்து பார் என்றான் (யோவா. 1:46). தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டு வந்த மேசியாவைக் காண மிகவும்

வாஞ்சையோடு நாத்தான்வேல் வருவதைக் கண்ட கிறிஸ்து இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார் (யோவா 1:47) அன்பானவர்களே என்ன அற்புதமான நற்சாட்சி என்று பாருங்கள்! இயேசுவின் 12 சீஷர்களிலேயே பற்தொலொமேயுக்கு அருமையான நற்சாட்சியைக் கர்த்தர் கூறுகிறார். தேவதாசன் யோபு கூறும் பொழுது என் நாக்கு கபடம் பேசுவதில்லை என்றும் என் கால் கபடு செய்ய தீவிரிக்கவில்லை என்றும் கூறுகின்றார் (யோபு 27:3, 31:5) நாம் புறாக்களைப்போல கபடற்றவர்களாக இருக்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகின்றார் (மத். 10:16). அவருடைய விருப்பத்தை நிறை வேற்றவேண்டுமெனில் திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும் (1பேதுரு 2:2,3) அதாவது நாத்தான் வேலைப்போல மனிதனுடைய வார்த்தைகளைவிட தேவனுடைய வார்த்தைகளையே விசுவாசிக்க வேண்டும். ஏனென்றால், விசுவாசம் வேத வசனங்கள் மூலமாகத்தான் வருகிறது (ரோமர் 10:17) மற்றபடி வேதத்தில் இல்லாத உபதேசங்கள் அனைத்தும் பாவமாகும் (ரோமர் 14:23) வேத வசனங்களே ஒருவரை கபடற்ற உத்தமனாக மாற்றும் வல்லமையுள்ளதாக உள்ளது. நாமும் இவரைப்போல வேதபுத்தகத்தை மட்டும் ஏற்றுக் கொள்வோம். வேறு புத்தகத்தை புறக்கணிப்போம், கபடற்றவர்களாக, உத்தமர்களாக இருக்க வாஞ்சையுள்ளவர்களாக இருப்போம்.

**II. பற்தொலொமேயுவின் ஊழியம்**

பிலிப்புவின் மூலமாக இயேசுதான் மேசியா என்பதை உறுதிப்படுத்தி யவுடன் ஆண்டவரிடம் அருட்பணிக்காக இயேசு அழைத்தபோது உடனே அவ்வழைப்பை ஏற்றுக் கொண்டு அவரைப் பின்பற்றிச் சென்றார். இயேசு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்து பின்பு 40 நாட்கள் அப்போஸ்தலருக்கு தரிசனமானார். அவர் பரமேறிச் செல்லும் போது இவரும் இருந்தார் (அப். 1:13) பிரதான கட்டளையான சுவிசேஷத்தை பிரசங்கிக்க பெந்தகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு உலகத்தின் பல பாகங்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் சென்றார். இவர் வேதத்தை ஆராயக்கூடியவரானபடியால் வேதத்தில் இந்தியா என்று சொல்லப்பட்டதை கவனித்து (எஸ்தர் 1:1) இந்தியாவின் வடமேற்குப் பகுதிவரை வந்து ஊழியம் செய்ததாகச் சொல்லப்படுகிறது! அவர் வந்ததற்கு அடையாளமாக அவர் யோவான் சுவிசேஷ புத்தகத்தின் ஒரு சில அதிகாரங்களைக் கொண்ட தோல் சுருளை அங்கு விட்டுச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. அந்தத் தோல் சுருள் எபிரெய மொழியில் எழுதப்பட்டிருப்பதால் அவர் வந்ததை உறுதிப் படுத்துகிறதாக உள்ளது.

பின்பு வட ஆப்பிரிக்கா பகுதியிலும் அதன் பின்பு தனது நண்பரோடு (பிலிப்பு) சேர்ந்து ஆசியாமைனர் பகுதியிலுள்ள ஏராப்போலி பட்டணத்திலும் ஊழியம் செய்தார். அப்போஸ்தலனாகிய பிலிப்புவோடு சில காலம் ஊழியம் செய்தார். பிலிப்புவோடு இவரும் சிறையில் அடைக்கப்

பட்டு தண்டிக்கப்பட்டார். ஆனால் பிலிப்பு இரத்த சாட்சியாகக் கொல்லப் பட்டார். இவரை விடுதலை செய்தனர் காரணம் என்னவென்று தெரியவில்லை பின்னர் ஆர்மீனியா சென்று அப்போஸ்தலனாகிய ததேயுவுடன் ஊழியம் செய்தார். கி.பி. 66ல் ததேயும் அவரோடு அநேக கிறிஸ்தவர்களும் இரத்த சாட்சியாகக் கொல்லப்பட்டு மரித்தனர். ஆனால், பற்தொலொமேயு எதற்கும் பயப்படாமல் அங்கேயே சில காலம் தொடர்ந்து ஊழியம் செய்தார். இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களை ஊழியத்திற்கு அனுப்பும் போது உங்கள் தலை யிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது ஆதலால் பயப்படா திருங்கள் அநேகம் அடைக்கலான் குருவிகளை (சிட்டுக்குருவிகள்) பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் (மத். 10:30.31) என்ற வாக்குத்தத்தை நம்பிக்கையாகக் கொண்டு அதே இடத்தில் தங்கி ஊழியம் செய்தார். தேவனுடைய சித்தமில்லாமல் நம்முடைய மரணம் நேரிடாது!

### III. பற்தொலொமேயுவின் இரத்த சாட்சி

ஆர்மீனியா பகுதியில் மகாதைரியமாக தொடர்ந்து ஊழியம் செய்யும் பொழுது அப்பகுதி மக்களுக்கு சரீர வியாதிகளைக் குணமாக்கினார். இதை அறிந்து ஆர்மீனிய அரசர் தனது மகள் மூளைக்கோளாறான வியாதி நீண்ட நாளாக இருந்து தனது மகள் மிகவும் கொடுமைக்குள்ளாக இருந்த படியால் அப்போஸ்தலனாகிய பற்தொலொமேயுவை அழைத்து தனது மகளின் வியாதி சுகமாக்கப்பட்டால் நாங்கள் அனைவரும் மெய்யான தேவனுக்கு கீழ்படிவோம் என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது. பற்தொலொமேயு அப்பெண்ணை சுகப்படுத்தினார். உடனே அரசர் குடும்பம் அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றனர். இதன் விளைவாக அரசர் வணங்கி வந்த விக்கிரக ஆராதனையின் பூசாரிகள் கோபமுற்று அரசனின் சகோதரன் அஸ்டியேஜசிடம் முறையிட்டனர். அவன் உடனே பற்தொலொமேயுவைப் பிடித்து வரும்படி கட்டளையிட்டான் அதன்படி அப்போஸ்தலனை பிடித்து வந்தனர். அவன் பற்தொலொமேயுவின் தோலை உரித்து (உயிரோடு) தலை கீழாகச் சிலுவையில் அறையும்படி கட்டளையிட்டான். இப்படியாக கி.பி. 68ல் மிகவும் கொடூரமான முறையில் பற்தொலொமேயு இரத்தசாட்சியாகக் கொல்லப்பட்டார்.


(தொடரும்)

**K. பாஸ்கர், சிறுமுகை**

**இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப் பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே (1தெச 3:3).**

**அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். (2தீமோ 3:12).**

# வேதாகம முகாம் - மே 5- 7, 2008






பெண்களுக்கான
சிறப்பு வகுப்பின்
போது...

←

**Ladies**
**Special Class**






Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postel Registration No. Erode / 26 / 2006 - 2008
Posted at Erode HPO on 20 th or 21 st of Every Month




முகாமில் கலந்து கொண்ட சிறுவர், சிறுமியர்கள்




முகாமில் பகல்நேர வகுப்பின் போது ...




முகாமில் உணவு வேளையின் போது...

Printed by : K.C. Senthilumar, at Sun Offset Printers, 50 Kovai Road, angayam - 638 701.
Editor. S. Rajanayagam.